விலை : 20.00
பக்கங்கள் : இருபது

[illegible] படிப்ப[illegible]
[illegible] சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 27 செவ்வாய்க்கிழமை (09.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 111

# இந்திய எம்.பிக்கள் குழுவின் இலங்கை பயணம் இரத்து

(சென்னை)

தமிழக மக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் எதிர்ப்பால் இந்திய எம்.பிக்கள் குழுவின் இலங்கைப் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இலங்கையுடன் அரசியல், வர்த்தகம், தொழில் உறவு குறித்து பேச 7 பேர் கொண்ட இந்திய எம்.பிக்கள் குழு நேற்று இலங்கை வரவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை பொருட்களை புறக்கணிக்க பிரசாரம்

(சென்னை)

தமிழகத்தில் இலங்கை பொருட்களை புறக்கணிக்க வலியுறுத்தி சென்னை மெரீனா கடற்கரையில் தமிழர் பண்பாட்டு நடுவம் சார்பில் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழர்களை படுகொலை செய்த இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்பது தமிழகத்தின் ஒட்டுமொத்த கோரிக்கையாகும்.

ஆனால், மத்திய அரசோ இதை கண்டுக்கொள்ளவில்லை. இதற்கு எதிராக இலங்கையுடனான வர்த்தக உறவுகளை விரிவுபடுத்தி வருகிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கை பொருட்களை தமிழகத்தில் பயன்படுத்துவதை கைவிட வலியுறுத்தி பிரசாரம் மேற்கொள்ள தமிழர் பண்பாட்டு நடுவம் (20ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பேருந்துகள் பணிப்புறக்கணிக்கும்

(கொழும்பு)

இலங்கையின் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் நாடு தழுவிய சேவைப் புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை நடத்த தயாராகியுள்ளது.

தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிக்குள் தமது போராட்டம் நடத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் குறிப்பான திகதியை அவர் அறிவிக்கவில்லை.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டம் நடத்தப்படவிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## இலங்கை அகதிகளுக்கு விளக்கமறியல்

(சென்னை)

அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாக தப்பிச்செல்ல முயன்ற இலங்கை அகதிகளை 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நாகை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் தோகைமலை நல்லூர் கிராமம், வேலூர் மாவட்டம் வாலஜா, குடியாத்தம், காஞ்சிபுரம் மாவட்டம் கும்மிடிப்பூண்டி கடைய நல்லூர் உட்பட தமிழகத்தின் பல்வேறு அகதி முகாம்களைச் சேர்ந்த 21 பெண்கள், 20 குழந்தைகள் உட்பட 120 பேர் கடந்த 5 ஆம் (20ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடி வெடித்ததில் ஹலோ ரஸ்ட் பணியாளர் பலி

### அகற்றும் பணியிலிருந்த போது பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது மிதிவெடி திடீரென வெடித்ததில் ஹலோ ரஸ்ட் பணியாளர் ஒருவர் பரிதாபமாக அந்த இடத்திலேயே பலியானார்.

இந்தச் சம்பவம் யாழ்.முகமாலைப் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் மாயனூர் வட்டக்கச்சியை சேர்ந்த கோணேசமுதலியார் முருகவேல் (வயது-44) என வடக்கு கிழக்கு மாகாண மிதிவெடி செயற்பாட்டு அலுவலகர் வ.முருகதாஸ் உறுதிப்படுத்தினார்.

மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டி (20ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் நிலப்பறிப்பு ஜனாதிபதியிடம் முறையிடத்திட்டம்


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் நில அபகரிப்பு, தென்னிலங்கையிலிருந்து ஆக்கிரமிக்கும் மீனவர்கள், தடை செய்யப்பட்ட வழிகளில் மீன் பிடித்தலில் ஈடுபடுதல் போன்றவற்றால் தொடரும் இந்த நடவடிக்கைகளால் தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கும் கரைத்துறைப்பற்று கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாஜத் தலைவர் து.ரவிகரன், இது தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கு தாம் கொண்டுவரவுள்ளதாகத் தெரிவித்தார்.

போரின் போது இடம்பெயர்ந்து தற்போது மீள்குடியேற்றப்பட்ட முல்லைத்தீவு கரையோரப் பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர் (20ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அவகாசமா?

### எதிர்க்கட்சிகள் கேள்வி



(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்துவதற்கு ஒன்றரை வருட கால அவகாசத்தை அரசு கோரியிருப்பதைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த பொது எதிர்க்கட்சிகள், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழி வகுக்கும் பரிந்துரைகளை அமுல்படுத்த ஒன்றரை வருடகாலம் தேவையில்லை. அவை உடனடியாகச் செய்து முடிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளன.

இருப்பினும், நல்லிணக்க ஆணைக்குழு (20ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்துக்கு புதிய ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள வீதிகள் காபர்ட் செய்யப்பட்டு உயர்தரத்தில் தற்போது இருப்பதனால் சாரதிகள் கொஞ்சம் வேகமாக வாகனங்களை செலுத்த முடியும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் காபர்ட் செய்யப்பட்ட வீதியை நேற்று திங்கட்கிழமை திறந்து வைத்தன் பின்னர் கல்கமுவ பகுதியில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் (19ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை. செயலகத்துக்கு முன்னால் நேற்று முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

(முல்லைத்தீவு)

முல்லை.முள்ளிவளை பகுதியில் தமிழ் மக்களுடைய நிலங்களை அபகரித்து முஸ்லிம் குடியேற்றத்தை ஏற்படுத்த அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையில் எடுக்கப்பட்ட முயற்சிகள் மக்களுடைய கடுமையான எதிர்ப்பினால் முடங்கி இருக்கும் நிலையில் நேற்று புத்தளத்திலிருந்து ஏற்றி வரப்பட்ட முஸ்லிம்களைக் கொண்டு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

மிக நீண்டகாலமாக மேற்குறித்த பகுதியில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களுக்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமித்து அந்தப் பகுதியில் 1400 ஏக்கர் நிலப்பகுதியில் முஸ்லிம் மக்களை குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்கு எதிராக குரல் கொடுத்த மக்கள் நீதிமன்றிலும் வழக்குத்தாக்கல் செய் (20ஆம் பக்கம் பார்க்க)

## இனத் தேசியவாதத்திற்கு இடமளிக்கப்படாது

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இனத் தேசியவாதத்திற்கு இடமளிக்கப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

சகல பிரஜைகளும் சுபீட்சமாக வாழக்கூடிய ஓர் சூழ் நிலையை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம் என வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இனப்பிரச்சினையை உருவாக்கசிலர் முயற்சித்துவருவதாகவும் இந்த முயற்சி வெற்றியளிக்காது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பான சகல விதமான குற்றச்சாட்டுக்களையும் உரிய முறையில் விசாரணை நடத்த தயார் எனவும் உலகில் ஏனைய ஜனநாயக நாடுகளைப்போன்றே இலங்கையிலும் விசாரணைகள் நடத்தப் (20ஆம் பக்கம் பார்க்க)

## இரும்புப் பெண்மணி காலமானார்

(லண்டன்)

இரும்புப் பெண்மணி என்று அழைக்கப்பட்ட பிரிட்டனின் முன்னாள் பிரதமரான மார்க்கரட் தட்சர் நேற்று திங்கட்கிழமை காலமானார். அவர் இறக்கும் போது அவருக்கு 87 வயதாகும்.

பக்கவாத நோய் தாக்கியதை அடுத்து அமைதியாக அவரது உயிர் பிரிந்ததாக அவரது சார்பிலான பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். கான்சர்வேட்டிவ் கட்சியின் முன்னாள் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இறப்புச் சம்பவங்கள் தொடர்பில் உரிய விசாரணை இடம்பெறுகிறது

## யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்) யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற சகல மரணங்கள் தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது என யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவரினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலை கடந்த 2012 ஆம் ஆண்டு 14 தாய் சேய் மரணங்கள் இடம்பெற்றுள்ளதாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மரணங்கள் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகம் ஏதாவது விசாரணைகள் மேற்கொண்டதா என ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அத்தோடு வைத்தியத் தவறினால் ஏற்பட்ட மரணங்கள் தொடர்பில் மூன்று கட்டமாக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற தாய் சேய் மரணங்கள் தொடர்பில் தாய் சேய் வைத்திய நிபுணர் திருமதி திருமகள் சிவசங்கர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார் எனவும் சுகாதார அமைச்சும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது எனவும் பதில் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## நீரோடும் கண்களோடு ஆறாம் மாத நினைவுகள்



மண் மகிழ்: 31.10.1955

கண் நெகிழ: 14.10.2012

திதி: சதுர்த்தசி

**சோமசுந்தரம் விக்னேஸ்வரன்**

(ஓய்வு பெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்)

காப்பாற்று என்று நாங்கள் கையடுத்த தெய்வங்கள் கண் மூடிக் கை விரிக்க நொடியுழைத்த வைத்தியர் கரங்கள் பதற பூப்போட்டு நாம் வணங்கும் தெய்வமாய் எம் புண்ணியரே போய்விட்டீர் கையறுந்து மனைவி கதறியழ உம் கண்மணியாம் ஏக மகன் துடித்து அன்புறையும் அன்னையொடு ஆறாம் மாத மாகியும் ஆறாய்ப் பெருகும் எங்கள் கண்ணீரைத் துடைப்பார் யாரைய்யா?

இன்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை நடைபெறும் எமது அன்பு தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

நிரந்தர முகவரி:
மீனாட்சியம்மன் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி,

தற்காலிக முகவரி :
மாலியாவத்தை, சங்கானை.


A/L - 15
(கலை, வணிகம்)
ஏப்பிரல் 13
8 மணி
DMI
Jaffna

யாழ்ப்பாணம் செல்லா சினிமா



சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

இன்று முதல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

06.04.2013 முதல் 11.04.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.


இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


## மூன்றாம் ஆண்டு நினைவில்



மண் மகிழ 30.08.1982

கண் நெகிழ 13.04.2010

**அமரர் பிரபாகரன் பிறேமலோஜினி**

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

குடும்ப உறவை குளிர்மைப்படுத்தும்
பாச அழைப்பை இனி!
எங்கு கேட்போம்
கடமை முடிந்த களைப்பில்
கண்ணயர்ந்து போனீர்களா?
மீளாப் பெருந்துயரில்
மூழ்கிய எங்களுக்கு இனி
உங்கள் நினைவுகள் தானே
ஆறுதல் கொடுக்கும்

## 16 ஆம் ஆண்டு நினைவில்



மண் மகிழ 03.05.1981

கண் நெகிழ 08.04.1997

**அமரர் கணபதிப்பிள்ளை பிரதீபன்**

என்றென்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

(C-2907)

## காரைநகர் மணற்காடு அருள்மிகு ஸ்ரீகும்பநாயகி முத்துமாரியம்பாள்

### தேர் உற்சவ சிறப்பம்சம்

### தேவி கும்பநாயகியின் தேரோட்டம் காண வாரீர்



ஆற்றாதழுத அருமந்த பிள்ளைக்கு
அமுதம் அளித்த கும்ப நாயகியே தேரேறி வருக
நோற்றார் மனத்தில் நினைத்ததை யெல்லாம்
நொடியில் அளிக்கும் கும்பநாயகியே தேரேறி வருக
கூற்றாம் வறுமையைக் கொன்று செல்வத்தை
கொளிக்கச் செய்யும் கும்பநாயகியே தேரேறி வருக
மாற்றார் மனத்தின் மயக்கத்தை அறுத்து
மாற்றம் தந்திட மணற்காட்டில் தேரேறி வருக

-வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை.எம்.பி அருளானந்தன்



(2348)

றூபா பன்முக வர்த்தகம் 104 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
...மணியகம் - 11, நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதி, இல. 17,18, 18A, யாழ்ப்பாணம். தொ.பே:- 021 222 3152

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நிம்மதி

கடற்கரையோரமாக பெரியவர் ஒருவர் கையாலே மணலைக் கீறிக் கொண்டிருந்தார். எதையோ தேடுவது போலும் இருந்தது. மெதுவாக அவர் அருகில் சென்று, "எதைத் தொலைத்து விட்டுத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

அவர் சாவகாசமாக என்னை நிமிர்ந்து பார்த்து; "நிம்மதியைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

இவர் கூறியதைக் கேட்டதும் எனக்கு ஒரு மாதிரியாகி விட்டது. இருந்தாலும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, நிம்மதி இந்த மணலிலே கிடைக்காது" என்றேன்.

"சரி... இன்று வசமாக நம்மிடம் ஒருவர் மாட்டிக் கொண்டார். அவருடன் கதைக்கலாம் என்று ஒரு பக்கமாகச் சென்று கதை கூற ஆரம்பித்தேன்.

ஒரு பெரிய ராஜா இருந்தார். அவருக்கு அனைத்து வசதிகளும் இருந்தது. இருந்தாலும் ஒரேயொரு குறை. அது என்னவென்றால் நிம்மதி இல்லை என்ற குறை.

அவர் நிம்மதியைத் தேட ஆரம்பித்தார். உடனே அதற்கான முயற்சிகளிலே தீவிரமாக இறங்கி மேதைகளை அழைத்து, "நிம்மதி எங்கே இருக்கிறது?" என்று விசாரித்தார்.

ராஜாவின் கேள்விக்கு ஒவ்வொருவரும் வெவ்வேறு கோணத்தில் விளக்கங்களை வழங்கினார்கள்.

எந்தப் பதிலும் ராஜாவுக்குத் திருப்தி அளிக்கவில்லை. ஆதலால், அவர்கள் அனைவரையும் "போய் வருமாறு" சொல்லி அனுப்பி வைத்து விட்டார்.

நாட்கள் கடந்த நிலையில்; ஒருநாள் அவர் மாளிகையின் உப்பரிகையிலே நின்று கொண்டிருந்தார்.

அச்சமயத்தில் தெருவிலே ஒரு பிச்சைக்காரன் மிகவும் உல்லாசமாக பாட்டுப்பாடிக் கொண்டு போய்க் கொண்டிருந்தான். குரலிலே ஒரு சந்தோசம். நடையிலே ஒரு மிடுக்கு. அவனிடம் சற்றுகூட கவலை தென்படவில்லை.

உடனே ராஜா இதை அவதானித்து விட்டு தனது ஏவலாளிகளை கைதட்டி அழைத்தார். "உடனே, ஓடிப்போய் அந்த யாசகனை அழைத்து வருமாறு" உத்தரவு பிறப்பித்தார்.

இவர்கள் போய் அழைத்ததும் அவன் வர மறுத்து விட்டான்.

இவர்கள் ராஜாவிடம் வந்து விடயத்தைச் சொன்னார்கள்.

ராஜாவுக்கோ மிகவும் ஆச்சரியம்.

"சரி அவன் என்னதான் சொல்கிறான்?" என்று விசாரித்து வருமாறு ஏவலாளிகளை மீண்டும் அனுப்பினார்.

"என்னைப் பார்க்க வேண்டுமென்றால், ராஜாவைத் தெருவிற்கு வரச் சொல்லுங்கள்" என்று பதிலனுப்பினான்.

அதை வந்து ராஜாவிடம் சொன்னார்கள். இருந்தாலும் ராஜாவுக்கு கோபம் வரவில்லை. இவ்வளவு சுதந்திர வேட்கையோடு, இருக்கிறவன் சாதாரண மனிதனாக இருக்க முடியாது என்று தன்னுள் நினைத்தார்.

உடனே தெருவோரம் வந்து அந்தப் பிச்சைக்காரன் அருகில் சென்று "நீ கவலைப்படாமல்- சந்தோஷமாக பாடிக்கொண்டு போகிறாயே... அது எப்படி உன்னால் முடிகிறது?" என்று கேட்டார்.

"ஏன் அப்படி கேட்கிறீர்கள்?"

"எனக்கு அரண்மனையிலே அனைத்து சுகபோகங்களும் இருந்தும் நிம்மதி இல்லை. இது ஏன் என்று தெரியவில்லை. உன்னைக் கேட்டால் தெரியுமென்று நினைத்தேன். ஆதலால் உன்னை அழைத்தேன்- அதற்கு நீ மறுத்து விட்டாய்" என்றார்.

பிச்சைக்காரன் கடகடவென்று சிரித்தான்.

"மகிழ்ச்சிக்குத் தடையாக இருப்பது இந்த மாளிகைதான். இதை உதறி எறிந்து விட்டு வெளியே வந்தால் நிம்மதி தானாகவே தேடி வந்து விடும்" என்றான்.

"நான் அரசன். எனக்கு கடமைகள் இருக்கிறது... அதை விட்டுவிட்டு எப்படி வர முடியும்?" என்று ராஜா கேட்டார்.

"இரண்டும் ஒரே நேரத்திலே எப்படி கிடைக்கும்? என்னைப் பாருங்கள்; என்னிடம் எதுவுமே கிடையாது, நிம்மதியாக வாழ்கிறேன்" என்றான்.

ராஜா சந்தோஷப்பட்டு தன்னுடைய மேலங்கியை எடுத்து அவனுக்குப் பரிசாகக் கொடுத்தார். அவன் சிரித்தவாறே அதை "வாங்கமாட்டேன்" என்றான்.

"இதை நீங்கள் எனக்கு கொடுப்பதால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. இந்தப் போர்வையை வாங்கிக் கொண்டால் அதைப் பெற்ற நேரத்தில் இருந்து அதைக் காப்பாற்றுவதற்கு கவலை வந்து விடும். அதன்பின் தூக்கம் வராது" என்று கூறி விட்டு அவன் சந்தோஷமாக போய் விட்டான்.

இப்போது நிம்மதி எங்கே இருக்கிறது என்பதை ராஜா தெரிந்து கொண்டார். அந்த இடத்திற்கு தன்னாலே போக முடியாது என்பதையும் புரிந்து கொண்டார்.

இப்படி இந்தக் கதையை கடற்கரை மணலிலே கீறிக்கொண்டு அந்தப் பெரியவர் சொல்லி முடித்தார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# அரச ஊழியர்களுக்கான அக்ரஹார காப்புறுதி கட்டணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட அக்ரஹார காப்புறுதி திட்டம் மூலம் வழங்கப்படும் இழப்பீடு மற்றும் மருத்துவ காப்புறுதி கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அறிவித்துள்ளது.

அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கமைய இதயநோய் சம்பந்தமான சத்திரசிகிச்சைகளுக்கு ஆகக் கூடியது நான்கு இலட்சம் ரூபாவும் சாதாரண சத்திர சிகிச்சைகளுக்கு ஆகக் கூடியது ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதுடன் திடீர் விபத்து அல்லது இயற்கை மரணங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக அமுலுக்கு வந்துள்ள கொடுப்பனவுகள் இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக மேற்படி நிதிய பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

முன்னர் இதய நோய் சத்திர சிகிச்சைகளுக்காக 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் சாதாரண சத்திர சிகிச்சைகளுக்காக ஒரு இலட்சம் ரூபாவும் மரணத்திற்காக 50 ஆயிரம் ரூபாவும் உச்சமாக வழங்கப்பட்டது.

எனினும் தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படும் பிரசவ சத்திர சிகிச்சைகளுக்கும் 21 வயதுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் மருத்துவ கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு அக்ரஹரா காப்புறுதி திட்டத்தில் சகல அரசாங்க ஊழியர்களும் சேர்ந்து கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன் அங்கத்தவர்களின் கட்டணம் 75 ரூபாவில் இருந்து 125 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் 2 இலட்சத்து 51000 மாணவர்கள் சித்தி

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் முதல் முறையாகத் தோற்றிய 3 இலட் சத்து 86 ஆயிரத்து 426 மாணவர்களில் 2 இலட்சத்து 51 ஆயிரம் மாணவர்கள் க.பொ.த. உயர் தரத்தில் கல்வி கற்பதற்கு தகுதி பெற்றுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

11 ஆயிரத்து 100 மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் சித்திபெறவில்லை. இது 4.13 வீதமாகும். 2011 இல் 60.84 வீதமானோர் இப் பரீட்சையில் தோற்றியிருந்தனர். எனினும் இந்த எண்ணிக்கை 64.74 வீதமாக அதிகரித்திருப்பதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. சகல பாடங்களுக்கும் ஏ சித்தி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 509 ஆகும்.

இது 1.6 வீதமாகும். 3 ஆயிரத்து 900 பேர் எட்டுப் பாடங்களில் ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. கணித பாடத்தில் 55.35 வீதமானோர் சித்தியடைந்துள்ளனர். விஞ்ஞான பாடத்தில் 68.26 வீதமானோரும் ஆங்கில பாடத்தில் 47.78 வீதமானோரும் சித்தியடைந்துள்ளனர்.

கொழும்பு, குருநாகல் மற்றும் காலி மாவட்டங்களில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 64 வீதத்துக்கும் அதிகமானவர்கள் சித்தியடைந் துள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 73.2 வீதமானவர்களும் குருநாகல் மாவட்டத்தில் 68.3 வீதமானவர்களும் காலி மாவட்டத்தில் 68.19 வீதமானவர்களும் சித்தியடைந்துள்ளனர். பரீட்சைகள் திணைக்களம் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தால் இணைந்து முன்னெடுக்கப்பட்ட விசேடமான கல்விச் செயற்பாடுகள் காரணமாகவே இம்முறை க.பொ. த.சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் எண்ணிக் கை அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 30 | 60 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 60-140 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 150 | 100 | 150 | 120 |
| தக்காளி | 100 | 50 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 45 | 50 | 40 |
| கோவா | 60 | 50 | 60 | 60 |
| கரட் | 90 | 120 | 120 | 120 |
| பூசணி | 50 | 40 | 60 | 60 |
| புடோல் | 60 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 110 | 100 | 90-120 | 100-140 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 120 | 40 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 40 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | -- | 80 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 60 |
| லீக்ஸ் | 120 | 110 | 120 | 120 |
| பீற்றூட் | 70 | 30 | 80 | 60 |
| கறிமிளகாய் | 90 | 60 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 200-350 | 400 | 400 | -- |
| போஞ்சி | 120 | 60 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 10-20 | 40 | 20 |
| தேசிக்காய் | 60 | 40 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 40-50 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 80-120 | 100 | 120 | 100 |

# இராசி பலன்

09.04.2013
(பங்குனி 27, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 3.28 மணிவரை
உத்தரட்டாதி முன்னிரவு 8.59 மணிவரை
இராகுகாலம் 3.06-4.36 மணிவரை
சுபநேரம் 10.36-12.06 மணிவரை
போதாயண அமாவாசை
குழந்தைவேற்சுவாமி குருபூசை

**மேடம்** தேகராக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், உறவினர் வருகையுண்டு, வாஞ்சி பாதைக்கு உதவி செய்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும், அரசு வழியில் அனுகூலமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண் டிய நாள், சில சட்டுப்பாடுகள் ஏற்படலாம்.

**சிங்கம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நாவினால் கவனம் செலுத்தினால் நாணயப் பாதிப்பிலிருந்து விடுபட முடியும், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும்.

**கன்னி** புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தாருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், திருமண முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** நல்ல செய்திகள் நாடி வரும் நாள், சுவாரஸ்யமான நாள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, தொழிலை விருத்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** தொலைபேசி வழித்தகவல் தொழில் உறுதுணை புரியும், பயணம் செல்ல போட்ட திட்டங்களில் சில திருப்பங்கள் ஏற்படலாம், புத்திரர்களின் தேவைகளை நிறைவு செய்வதில் முனைவு காட்டுவீர்கள்.

**தனுசு** அரசியல் செலவுகள் மேலோங்கும், சகோதர வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள், நம்பிக்கைக்குரிய நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம்.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரலாம், இளைய சகோதரத்தின் வழியில் இனிய செய்தி ஒன்று வந்து சேரலாம்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட விடயங்களில் பலனுண்டு, கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகும்.

**மீனம்** திட்டமிட்ட பயணங்களில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், உணர்ச்சி வசப்படும் சூழ்நிலை உருவாகும், ஆழ்ந்த சிந்தனை உண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கூட்டமைப்பை சந்திக்கிறது இந்திய எம்.பிக்கள் குழு

(யாழ்ப்பாணம்)

இந்திய நாடாளுமன்றக் குழுவினரை இன்று மாலை யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபைத் தவிசாளர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய பாராளுமன்றக்குழுவினர், இந்திய அரசின் வெளிவிவகார அமைச்சின் உயர்மட்ட திட்டக் கண்காணிப்புக்குழுவின் உறுப்பினர்கள் இருவர் அடங்கிய குழு வடமாகாணத்தில் இந்திய அரசால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட வருகை தந்துள்ளனர்.

இந்நிலையில் இன்று மாலை யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதுவராலயத்தில் இந்தக் குழுவினரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சி.வி.கே.சிவ ஞானம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பிரதேச, நகர சபைத் தவிசாளர்கள் மற் றும் யாழ்.சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட் டோர் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-6)




நன்றி: மிரர்

## விற்பனையும் காட்சிப்படுத்தலும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் ஆலோசனையின் பேரில் சமுர்த்தி மற்றும் வாழ்வு எழுச்சி விற்பனை சந்தையும் உற் பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தலும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் றக்கா வீதி இளம் சிங் கம் சனசமூக நிலைய விளையாட்டு மைதா னத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு புதுவருடத்திற்கு தேவையான உற்பத்திப் பொருட்களை மக்கள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வதை நோக்கமா கக் கொண்டுள்ளதாக யாழ்.பிரதேச செயலர் எஸ்.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (அ)

* * *

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுக்குட் பட்ட சமுர்த்தி வங்கிச் சங்கங்களினால் புது வருடச் சந்தை நாளையும் நாளை மறுதின மும் நெல்லியடி பொதுச் சந்தை முன்பாக நடைபெறவுள்ளதாக கரவெட்டி வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

எனவே, வருடாவருடம் நடத்தப்பட்டு வரு கின்ற புதுவருடச் சந்தையில் கரவெட்டி பிர தேச மக்களின் பண்டிகைக்கால உற்பத்திப் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஆயிரத்து 500 ரூபா பெறுமதி யான சுதேச உலர் உணவுப் பொதியினை ஆயிரம்ரூபாவிற்கு விற்பனைசெய்யவுள்ளனர்.

இதில் தைத்த மற்றும் நெசவு ஆடைகள், பனை, தென்னை உற்பத்திப் பொருட்கள், சிற் றுண்டி வகைகள், பால் உற்பத்திப் பொருட்கள், விவசாய உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றை யும் விற்பனை செய்யவுள்ளனர் என சமுர்த்தி மகா சங்கம் அறிவித்துள்ளது. (அ-3-60)

* * *

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தினரால் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு திவிநெகும வாழ்வெழுச்சி புத்தாண்டுச் சந்தையொன்று இன்று காலை 9.30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளு மன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் ஆகியோரும் கௌரவ விருந் தினராக நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் இ.ரவீந்திரன், யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ஆ.ரகுநாதன், சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் செ.இராமநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# இடைத்தரகர்களை நம்பி ஏமாந்துபோக வேண்டாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு வருகை தரும் பொதுமக்கள் இடைத்தரகர்களை நம்பி ஏமாந்து போக வேண்டாம் என யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு வெளியே யுள்ள இடைத்தரகர்கள் ஊடாக தமது தேவை களை நிறைவு செய்து கொள்ளும் நோக்கு டன் பலர் அவர்களை நம்பி ஏமாந்து போயுள் ளதோடு இடைத்தரகர்கள் குறித்து பல முறைப்பாடுகளும் வந்த வண்ணமுள்ளது எனவும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் மக்கள் தமது தேவைகளை இலகுவான முறையில் பூர்த்தி செய்து கொள்ளவும் சேவைகளை பெற்றுக் கொள்ளவும் வழிவகைகள் செய்து கொடுக் கப்பட்டுள்ளது எனவும் மாவட்ட செயலக முகப்பு வாயில் பிரஜைகள் பட்டயம் காட்சி ப்படுத்தப்பட்டுள்ளது.

பொது மக்கள் இடைத்தரகர்களை நம்பி ஏமாந்து போக வேண்டாம் என அரசாங்க அதிபர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-6)

# யாழ்.வைத்தியசாலைக்கு மேலும் வீடியோ கமராக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களையடுத்து வீடியோ கமரா பொருத்தும் நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக யாழ்.போதனா வைத்திய சாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மாதமளவில் யாழ்.போதனா வைத் தியசாலையின் புதிய கட்டடத் தொகுதியில் பொருத்தப்பட்டிருந்த இலத்திரனியல் அவசர அழைப்புக் கருவி திருட்டுப் போன சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப் பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்தோடு திருட்டுச் சம்பவங்களை இல் லாது ஒழிக்கும் நோக்குடன் போதனா வைத் தியசாலையில் வீடியோ கமரா பொருத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதா கவும் இதற்காக அனுமதியை சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் பல பகுதிகளில் ஏற்கனவே வீடியோ கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. (அ-6)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தும்பளை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளியம்மன் வடபத்திரகாளி அம்மன் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து மே மாதம் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இவ் அலங்கார உற்சவத்தில் எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறும். (அ-5)

## ஆண்டு விழாவும் விளையாட்டு போட்டியும்

(நல்லூர்)

ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலை யத்தின் 55 ஆவது ஆண்டு விழாவும் விளை யாட்டு போட்டியும் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் காலை 6 மணிக்கு 50 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டியும் 10 மைல் மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது.

மாலை 6 மணிக்கு கயிறிழுத்தல், கிறிஸ் கம்பம் ஏறுதல், சாக்கோட்டம், சங்கீதக்கதிரை, முன்பள்ளி சிறுவர்களுக்கான விளையாட் டுக்கள் என்பனவும் இடம்பெறவுள்ளன.


இப்போட்டிகளில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்டவர்கள் பங்குபற்ற முடியும்.

பங்குபற்றுபவர்கள் நிலைய செயலாளரு டன் 0757605965 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறி விக்கப்பட்டுள்ளது. (அ-3-134)

## பாலஸ்தாபனம்

(சித்தன்கேணி)

நவாலியூர் களையோடை கண்ணகை அம்மன் ஆலய பாலஸ்தாபன விஞ்ஞாபனம் நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு விநாயக வழிபாட்டினைத் தொடர்ந்து பூர் வாங்கக் கிரியைகள் கர்மாரம்பம் நடைபெற வுள்ளதுடன் நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 9 மணிக்கு புண்ணிய யாக பூசைகள் அபிஷேகம் விசேட பூசைகள் இடம்பெறும் என ஆலய பூசகரும் அறங்கா வலருமான கந்தையா நாகேந்திரம் அறிவித் துள்ளார். (அ-3-17)






யாழ்.அரியாலை கிழக்கு அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு சமவுரிமை கிடைக்க வேண்டும்

## அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு

இலங்கை தமிழர்களுக்கு சம உரிமை கிடைக்க வேண்டும். அதற்கு அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும். அதிகாரம் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பது தான் காங்கிரஸ் கட்சியின் நிலை என இந்திய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காங்கிரஸ் கட்சி தனது நிலையை ஒரு போதும் மாற்றிக் கொள்ளாது. ஆனால் தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சியில் இலங்கை தமிழர் பிரச்சினையில் முன்பு என்ன சொன்னார்கள் என்பது சட்டசபை அவை குறிப்பிலேயே உள்ளது. இலங்கை தமிழர்களுக்கு சம உரிமை, சம அந்தஸ்து, குடியுரிமை வழங்கப்பட வேண்டும். இலங்கை தமிழர் பிரச்சினையில் தி.மு.க. தலைவர் கருணாநிதியை நாங்கள் சந்தித்த போது 2 கோரிக்கைகளை முன்வைத்தார். அதாவது, ஐ.நாவில் கொண்டு வரும் தீர்மானம் வலுவாக இருக்க வேண்டும் என்றும் இந்திய பாராளுமன்றத்திலும் தீர் மானம் கொண்டு வர வேண்டும் என்றும் கூறினார்.

ஆனால் இதை டில்லியில் சென்று கட்சி தலைமைக்கு சொல்வதற்குள்ளேயே ஆதரவை வாபஸ் பெற்றுக்கொண்டனர். ஐ.நா.தீர்மானத்தில் கொண்டுவரப்பட வேண்டிய திருத்தங்களை இந்திய தூதரிடம் கொடுத்து ஐ.நா.வுக்கு அனுப்பினோம்.

இதேபோல் பாராளுமன்றத்திலும் தீர்மானம் கொண்டுவர அனைத்து கட்சி கூட்டம் கூட்டப்பட்டது. அதில் தமிழக கட்சிகளும் காங்கிரஸ் கட்சியும்தான் ஆதரவு தெரிவித்தன. பா.ஜ.க. உள்ளிட்ட ஏனைய கட்சிகள் ஆதரிக்கவில்லை.

எனவே காங்கிரஸ் கட்சி இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக இல்லை என்பதை வன்மையாக கண்டிக்கிறேன். இலங்கை தமி ழர்களுக்கு எந்த அளவுக்கு செய்ய முடியுமோ அதை காங்கிரஸ் செய்யும். தமிழகத்தில் காங்கிரசை தனிமைப் படுத்த முடியாது என்றார். (அ-2)


WESTERN UNION

MONEY TRANSFER

சித்திரைப் புத்தாண்டிற்கு வெளிநாட்டிலிருந்து வெஸ்டன் யூனியன் மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் பெற்றுக்கொண்டு அளப்பரிய பரிசில்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

இச்சலுகை ஏப்ரல் 10 முதல் 20 வரை

ஸ்ரீ முருகன்

தொலைத் தொடர்பு நிலையம்

303, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி இல: 0212225392- 0212222670.



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>உயரம்: 5'7"<br>கி.பா: 23.25, 2 இல் செவ்<br>தகைமை/தொழில்: BSc Bank Officer<br>எ.பா: சைவபோசனம்<br>தொ.இ: B -1569 | பிறப்பு: 1989 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூசம் 2<br>உயரம்: 5'2"<br>கி.பா: 52, 12 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -653 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 2<br>உயரம்: 5'4"<br>கி.பா: 34, 8 இல் செவ்<br>தகைமை/தொழில்: A/L, வியாபாரம்<br>தொ.இ: B -1573 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'<br>கி.பா: 9.25<br>தகைமை/ தொழில்: GAQ மருத்துவக் கலவையாளர்<br>தொ.இ: G-654 |
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5'9"<br>கி.பா: 21.75<br>தகைமை/ தொழில்: BA Dip in Edu (பட்டதாரி ஆசிரியர்)<br>தொ.இ: B -1576 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>உயரம்: 5'6"<br>கி.பா: 14.5<br>தகைமை/ தொழில்: BSc,MSc (UKPR)<br>தொ.இ: G -655 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 1<br>உயரம்: 5'6"<br>கி.பா:97, 1 இல் செவ்<br>தகைமை/தொழில்: HNDA முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: B -1578 | பிறப்பு: 1972 இந்து செங்குந்தர்<br>நட்சத்திரம்: பூசம் 1<br>உயரம்: 5'9"<br>கி.பா: 47.25, 1 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -608 |

சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி



மலிவு விற்பனை




புதுவருடத்தை முன்னிட்டு 14.04.2013 வரை

தம்ரோ, பியெஸ்டா, பொருட்களின் ஏக விநியோகஸ்தர்களான எம்மிடம் அலுமாரி வகைகள், கணனி மேசைகள், பிளாஸ்ரிக் கதிரை

வகைகளை 5% - 10% வரையிலான விற்பனைக் கழிவுகளில் பெற்றுக்கொள்ளலாம். இங்கு Stand fan, Rice Cooker , Gas Cooker, Innovex TV போன்றவைகளும் பெற்றுக்கொள்ளலாம்.



- ✔ நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு Sofa செற்றிகளுடன் 7000 பெறுமதியான Preethi Mixer Grinder ஒன்று இலவசம்
- ✔ நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு Steel அலுமாரிகளுடன் ஒரு Iron Box இலவசம்.
- ✔ நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு மெத்தைகளுடன் ஒரு பிளாஸ்ரிக் Teapo இலவசம்.
- ✔ 25,000/- பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்தால் இலவச விநியோக சேவை.

Jamuna Furnitures

55, பருத்தித்துறை வீதி,
நெல்லியடி. 021 226 2829

(சி/2906)

181, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 1092

Valampuri Graphics


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வருடப்பிறப்பும் அதன் கருமங்களும்

### வாக்கிய பஞ்சாங்கம்

நிகழும் நந்தன வருடம் பங்குனி மாதம் 31 ஆம் திகதி (13/04/2013) சனிக்கிழமை முன்னிரவு 11.58 மணிக்கு, பூர்வபக்க சதுர்த்தித் திதியில் கார்த்திகை நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில், ஆயுஸ்மான் நாம யோகத்தில், வணிகக் கரணத்தில், தனு லக்கினத்தில், கன்னி நவாம்சத்தில் சூரியன் காலவோரையில், குரு சூக்கும வோரையில், ராட்சத குணவேளையில்நட்சத்திரத்திரப்பட்சியாகிய வல்லூறு நகைத் தொழிலும் சூக்கும பட்சி அரசுத் தொழிலும் செய்யுங்காலத்தில் இப் புதிய விஜய வருடம் பிறக்கின்றது. அன்று முன்னிரவு7.58மணிமுதல்அன்று பின்னிரவு 3.58 மணிவரையுள்ள காலம் விஷு புண்ணிய காலமாகும்.

### திருக்கணித பஞ்சாங்கம்

நந்தன வருடம் பங்குனி மாதம் 31 ஆம் திகதி 13/04/2013) சனிக்கிழமை பின்னிரவு 01.29 மணிக்கு விஜய என்னும் பெயருடைய புது வருடம் பிறக்கின்றது. அன்று நட்சத்திரம் கார்த்திகை நான்காம் பாதம், பூர்வபட்ச சதுர்த்தி திதியில் அமிர்த சித்த யோகமும் கூடிய வேளையில் மகர லக்கினத்தில் 60 வருட சுற்று வட்டத்தில் 27 ஆவது வருடமாக இப்புதிய வருடம் பிறக்கின்றது. அன்று இரவு 9.29 மணிதொடக்கம் அன்று பின்னிரவு 5.29 மணி வரையுள்ள காலம் மேட சங்கிரம புண்ணிய காலமாகும்.

### புது வருடக் கருமங்கள்

புது வருடத்தினமான ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நித்திரை விட்டெழுந்து சங்கற்ப பூர்வமாக மருத்துநீர் தேய்த்து தலையில் ஆலிலையும் காலில் இலவமிலையும் வைத்து ஸ்நானம் செய்து நீல நிறப்பட்டாயினும் அல்லது நீலக்கரை வைத்த வெள்ளைப் புதுவஸ்திரமாயினுமந் தரித்து இந்திர நீலம் பதிக்கப்பெற்ற ஆபரணங்களையணிந்து நித்திய கர்மானுஷ்டானம் முடித்து, கண்ணாடி, தீபம், பூரண கும்பம் முதலான மங்கலப் பொருட்களைத் தரிசித்து, விநாயகர் முதலிய இஷ்ட குல தேவாராதன தரிசனங்கள் செய்து, தத்தம் இல்லங்களில் புதுவருட சூரியனுக்கு பொங்கல் பூசை வழிபாடுகள் செய்து குரு, பெற்றோர் முதலான பெரியோர்களை வணங்கி பிதிர் விரதானுகாரிகள் சிரார்த்தம், தர்ப்பணம் என்பன செய்து நண்பர்கள், விருந்தினரை வரவேற்று சுற்றத்தினருடனிருந்து எள்ளன்னம், வேப்பம் பூ நெல்லிக் காய் துவையல் முதலியவற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போசனம் செய்து தாம்பூலமருந்தி, சுகந்த சந்தன புஸ்பாதிகளை அணிந்து, புதுப்பஞ்சாங்க பலன்களைக் கேட்டு புது வருடத்தில் ஆற்றக் கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து மங்களகரமாக வாழ்வார்களாக.

### சங்கிரம தோச நட்சத்திரங்கள்

கார்த்திகை, ரோகிணி, மிருகசீடம் 1,2 ஆம் பாதங்கள், உத்தரம், சித்திரை 3,4 ஆம் பாதங்கள் சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள், உத்தராடம்.

### மருத்து நீர் தயாரித்தல்

தாழம்பூ, தாமரைப் பூ, மாதுளம் பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழு நீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை மஞ்சள், மிளகு, திப்பிலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்திலிட்டு காய்ச்சிய கஷாயமாகும். பூவகை கிடையாது விடின் அவைகளின் இலை, பட்டை, வேர், கிழங்கு யாதாயினும் உபயோகிக்கலாம்.

### கை விசேஷம்

**வாக்கிய பஞ்சாங்கம்**

14/04/2013 ஞாயிறு முற்பகல் 8.11 மணிமுதல் முற்பகல் 9.52 மணிவரை.

14/04/2013 ஞாயிறு 10.04 மணி முதல் நண்பகல் 12.03 மணிவரை

14/04/2013 ஞாயிறு நண்பகல் 12.15 மணி முதல் பிற்பகல் 2.10 மணிவரை

14/04/2013 ஞாயிறு பிற்பகல் 2.22 மணி முதல் பிற்பகல் 4.11 மணிவரை

14/04/2013 ஞாயிறு முன்னிரவு 8.25 மணி முதல் முன்னிரவு 9.04 மணிவரை

15/04/2013 திங்கள் முற்பகல் 9.14 மணி முதல் முற்பகல் 9.48 மணிவரை

15/04/2013 திங்கள் முற்பகல் 10.09 மணி முதல் முற்பகல் 11.59 மணிவரை

**திருக்கணித பஞ்சாங்கம்**

14/04/2013 ஞாயிறு முன்னிரவு 10.26 மணி முதல் நண்பகல் 12.02 மணிவரை.

15/04/2013 திங்கள் காலை 6.02 மணி முதல் முற்பகல் 7.14 மணிவரை.

15/04/2013 திங்கள் முற்பகல் 9.14 மணிமுதல் முற்பகல் 10.01 மணிவரை.

# பூரண சுயாட்சியை உறுதிப்படுத்தும் அரசியல் தீர்வே முன்வைக்கப்பட வேண்டும்

## டெலோ தேசிய மாநாட்டில் 8 தீர்மானங்கள் நிறைவேற்றம்

(பூந்தோட்டம்)

**இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இணைப்பாட்சி (சமஷ்டி) அரசியல் முறையின் கீழ் பூரண சுயாட்சியை உறுதிப்படுத்தும் அரசியல் தீர்வே முன்வைக்கப்படல் வேண்டும் என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) 8 ஆவது தேசிய மாநாட்டில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

இலங்கைத்தீவில் தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளை நனவாக்ககூடிய விதத்தில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் எம் இனத்தின் மரபு வழி தாயகம் இணைந்த வடக்கு, கிழக்காகும் என்றும் அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாநாட்டிலேயே இந்தத் தீர்மாணம் உட்பட மேலும் 9 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு,

தமிழ் இனத்தின் மரபு வழித் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இன விகிதாசாரத்தினை மாற்றியமைக்கும் நோக்குடன் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்படும் சகல சட்ட விரோத குடியேற்றங்களையும் உடனடியாக நிறுத்தி ஏற்கனவே இடம் பெற்ற குடியேற்றங்களையும் கலைக்குமாறு அரசாங்கத்தை கோருகின்றது.

சகல தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்குமாறு இலங்கை அரசை கோரும் அதேவேளை ஏற்கனவே புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுவதும் விசாரணைகளுக்கு உள்ளாக்கப்படுவதும் நிறுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பூரண சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் படைத்தரப்பினரின் தலையீடுகள் சிவில் நிர் வாகத்தில் இனிமேலும் இடம்பெறக் கூடாது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலை கொண்டுள்ள அரச படைகள் மீள் பெறப்பட வேண்டும் எனவும் முப்படைகளிலும் பொலிஸ் துறையிலும் தமிழ், முஸ்லிம் சமூகங்களை சேர்ந்தோர் தம் இன விகிதாசாரத்திற்கேற்ப இடம்பெறுவதற்கு காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் சட்டம், ஒழுங்கை நிலை நாட்டு வதிலும் பேணுவதிலும் பொலிஸ்துறையினர் மாத்திரமே ஈடுபடுத்தப்பட வேண்டும்.

முஸ்லிம் மக்கள் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள மதவாத அமைப்புக்களை சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதுடன் சட்ட ரீதியாக தடை செய்யப்பட வேண்டும்.

காணாமல் போனதாக முறையிடப்பட்டிருக்கும் சகல தமிழ் மக்கள் தொடர்பில் அரசாங்கம் உண்மை நிலையை இனியாவது தெளிவுபடுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரின் காரணமாக இடம்பெயர்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடங்களில் மீள் குடியேறுவதற்கு தடையாக உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் உட்பட சகல காரணிகளும் நீக்கப்பட்டு மீள் குடியேறியேற்றம் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட வேண்டும்.

இலங்கையில் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வந்திருக்கும் தமிழ் இனப்படுகொலைகள் தொடர்பில் சுதந்திரமானதும் சர்வதேச ரீதியான விசாரணை நடத்தப்படல் வேண்டும்.

தமிழ்த்தேசிய அரசியல்கட்சிகளின் ஒற்றுமை அணியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பலப்படுத்தப்பட்ட ஸ்தாபன ரீதியான கட்டமைப்புடன் தமிழ்த்தேசிய இனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஜனநாயக அரசியல் குரலாக தொடர்ந்தும் தீவிரமாக செயற்படுவதற்கு தேவைப்படும் சகல நடவடிக்கைகளும் உடனடியாக முன்னெடுக்கப்படல் வேண்டும் ஆகிய தீர்மானங்களே இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. (அ-2-266)

# கயிறு திரித்தலில் மக்கள் ஆர்வம்

வவுனியா கற்பகபுரம் கிராமத்தில் நைலோன் கயிறு திரித்தல் தொழிலுக்கு மக்கள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

மீள் எழுச்சி திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தினூடாக வழங்கப்படும் நிதியுதவியினூடாக மேற்கொள்ளப்படும் இக் குடிசைக் கைத்தொழிலின் மூலம் போதுமான வருமானத்தை பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளதென குறித்த தொழிலில் ஈடுபடுவோர் தெரிவிக்கின்றனர்.

மன்னார் பிரதேசங்களில் காலம் கடந்த நிலையில் காணப்படும் மீன் பிடிக்கும் வலைகளை கொள்வனவு செய்து அதனை தூய்மைப்படுத்தி அக் கயிற்றை தாம் தயாரித்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

இக் கயிற்றினை தாம் அடி ஒன்று 5 ரூபா வீதம் கடைகளுக்கு வழங்குவதாக தெரிவிப்பதுடன் இதே வேளை அத்தொழிலினை மேம்படுத்துவதற்கு போதுமான வசதிகளை ஏற்படுத்தி தரும் பட்சத்தில் தாம் இத் தொழிலை பாரியளவில் மேற்கொள்ள முடியும் எனவும் இத் தொழிலில் ஈடுபடுவோர் தெரிவிக்கின்றனர். (அ-2-266)

## க.பொ.த.(சா/த) பரீட்சை முடிபுகள் -2013

### யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

**தமிழ்மொழிமூலம்**


மு.வெண்ணிலா-9ஏ, ர.சுரேக்கா-9ஏ, கா.கீர்த்தனா-9ஏ, சி. கோகிலா-9ஏ, கு.அர்ச்சனா-8ஏபி, வீ.கஜிதா-8ஏபி, இ.கபில்ஜா-8ஏபி, கு.ரஜிலதா-8ஏசி, த.நிதர்சினி- 8ஏசி, த.கிருஷிகா-7ஏ2பி, வே.வாகினி-7ஏபிசி, பி.சுர்மிளா-7ஏபிசி, அ.மோகனா-6ஏ2பிசி, தே.கோமகள்-6ஏபிசி, சி.டிலக்சினி-6ஏபி2சி, ஸ்ரீ.நீரஜா- 6ஏபிசி, ச.சர்மிஷா-6ஏ 3சி, ம.இந்துஜா-6ஏ3சி, ஈ.பவித்திரா-5ஏ4பி, உ.தர்சிகா-5ஏ2பி2சி, சி.சாதனா- 5ஏபி3சி, கி.துவாரகா-4ஏ4பிசி, பொ.சாம்பவி-4ஏ2பி 3சி, சி.தர்மினி-4ஏபி2சிஎஸ், இ.வித்தியா-4ஏபி2எஸ்.

**ஆங்கிலமொழிமூலம்**

ச.டிலோஜி-9ஏ, க.ரூபினி-8ஏபி

### யா/வல்வை. சிவகுரு வித்தியாலயம்

க.கேசவி- 9ஏ, கி.பிரியங்கா-7ஏ2பி, பு.மதுஷா-5ஏ2பி2சி, நா.ஜதுர்ஷா-5ஏபி3சி



அருள்மிகு நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவ பெருவிழா நேற்று முன்தி னம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்படும் மஹிந்த திட்டவட்டம்

ஒரு நாட்டின் தேசிய கீதத்தை இரு மொழிகளில் பாடும் நாடு ஏதேனும் இருந்தால் அந்த நாட்டின் பெயரைத் தனக்குக் கூறுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய கீதத்தில் சிங்கள மொழியையும் சேர்த்து கொள்வது தொடர்பில் கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவையின் போது அமைச்சர் வாசுதேவ நாணயக்கார முன்வைத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு காட்டமாக தெரிவித்துள்ளார்.

தான் இவ்வாறானதொரு தீர்மானத்துக்கு வந்தால் சிங்கள பௌத்த மக்களுடன் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிவரும்.

இல்லாத ஒரு பிரச்சினையை உருவாக்க தான் தயார் இல்லை என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் தெரிவித்துள்ளார். (அ-2)

# வன்னியிலிருந்து சர்வதேச ரீதியாக சிறந்த வீரர்களை உருவாக்க முடியவில்லை

## அமைச்சர் ரிசாத் வருத்தம்

(பூந்தோட்டம்)

வன்னியில் இடம்பெற்ற கடந்த கால அசாதாரண சூழ்நிலை காரணமாக அங்கிருந்து சர்வதேச ரீதியான வீரர்களை உருவாக்க முடியாது போயிருந்தது என வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு ஏற்பாடு செய்திருந்த வடமாகாண விளையாட்டுவிழாவை கடந்த 6 ஆம் திகதி வவுனியா நகரசபை மைதானத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர்,

இலங்கை தேசம் என்பது ஒரு தனிச் சமூகத்திற்கு மட்டும் சொந்தமானதல்ல. இலங்கையின் அரசியல் அமைப்பு சட்டத்தில் சகல சமூகங்களின் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனை மீறி செயற்பட எவருக்கும் முடியாது.

வடக்கில் காணப்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பெரும் இழப்புக்களை எமது மக்கள் சந்தித்தனர். இந்த இழப்புக்களை மட்டுமின்றி அபிவிருத்தியும் மக்களிடமிருந்து அகன்று சென்றிருந்தன.

2009 ஆம் ஆண்டு ஏற்பட்ட சமாதான சூழலின் பின்னர் தற்போது சகல துறைகளும் அபிவிருத்தி கண்டு வருகின்றன. அன்றைய சூழலினால் எமது இளைஞர் சமூகத்தின் ஆற்றல்களும் திறமைகளும் முடக்கப்பட்டிருந்தன. இதனால்சிறந்தவீரர்களைசர்வதேசத் திற்கு எடுத்துக்காட்ட முடியாது இருந்தது.

இன்று தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற பேதங்கள் இன்றி 'இப் பிரதேச மக்கள் ஒன்றாக வாழ்ந்து வருகின்றனர். அந்த சுதந்திரம் இங்கிருக்கின்றது. இன்று இந்த விளையாட்டு மைதானத்தில் கூட சகல இன வீரர்களும் கலந்து நிற்பது வரவேற்பதற்குரியது என தெரிவித்தார். (அ-2-266)

# தங்க ஆபரணங்கள் கைப்பற்றப்பட்டன

சட்டவிரோதமான முறையில் இலங்கையிலிருந்து எடுத்துச் செல்ல முற்பட்ட தங்க ஆபரணங்கள் மற்றும் வெளிநாட்டு பணத்தை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

ஜப்பானை நோக்கி நேற்று முன்தினம் இரவு பயணிக்க தயாரான ஜப்பான் பிரஜையிடமிருந்து இவை மீட்கப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கத் திணை க்கள ஊடகப் பேச்சாளர் வெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்டுள்ள ஆபரணங்களின் பெறுமதி ஒரு கோடி எனவும் வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதி 30 இலட்சத்திற்கும் அதிகமாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தமிழக போராட்டங்களால் சுற்றுலா முகவர்கள் பாதிப்பு

இலங்கைக்கு எதிராக தமிழகத்தில் நடத்தப்படுகின்ற ஆர்ப்பாட்டங்களால் இலங்கையின் சுற்றுலா முகவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு மாத காலப்பகுதியில் சென்னைக்கான எந்த ஒரு பயணத்திட்டங்களையும் விநியோகிக்க முடியாமல் போய் இருந்ததாக சுற்றுலா முகவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வழமையாக ஒவ்வொரு வருடத்திலும் ஏப்ரல் மாதம் தமிழகத்துக்கு விஜயம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படும். எனினும் இம்முறை அந்த எண்ணிக்கை சடுதியாக குறைவடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலைமை நீடிக்குமாக இருந்தால் தமிழகத்திற்கான சுற்றுலாத் துறையை நம்பியுள்ள முகவர்கள் தங்களின் தொழில்களை இழக்க நேரும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (அ-2)

# தமிழக எதிர்ப்பிற்கு அதிருப்தி; இலங்கை நடிகர்கள் பூஜை

தமிழக எதிர்ப்பிற்கு அதிருப்தி வெளியிட்டு இலங்கை நடிகர், நடிகையர் அதிஸ்டான பூஜைகளை நடத்தவுள்ளனர்.

சுதந்திர சதுக்கத்தில் நாளை மறுதினம் நடிகர், நடிகையரும் விளையாட்டு வீரர்களும் கூட்டாக இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

நாளை மறுதினம் மாலை 4.30 மணிக்கு வெள்ளை ஆடை அணிந்து அனைத்து கலைஞர்களும் இந்தப்பூஜையில் பங்கேற்குமாறு கோரப்பட்டுள்ளது.

குறித்ததினத்தில்திரைப்படமற்றும் தொலைக்காட்சி நாடகப் படப்பிடிப்புக்கள் இரத்துச் செய்யப்படவுள்ளன.

நாட்டுக்கு எதிராக போலிப்பிரசாரங்கள் நடத்தப்பட்டு வருவதாக இலங்கை நடிகர், நடிகையர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இலங்கைத்தமிழர்பிரச்சினையை அண்மையில் முன்னிலைப்படுத்தி இந்திய நடிகர், நடிகையர் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஜெனீவா பிரச்சினையை மறைக்க அரசால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு

## பொதுபலசேனாவை சாடுகிறார் குமரகுருபரன்

(கொழும்பு)

பொதுபலசேனா அமைப்பினால் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இனவாத செயற்பாடுகளை கண்டும் காணாதது போல் இருக்கும் இன்னுமொரு பௌத்த பிக்குவே மஹிந்த ராஜபக்ஷ என ஜனநாயக மக்கள் முன்னணியின் மேல்மாகாண சபை உறுப்பினர் நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனீவா பிரச்சினையை மறைப்பதற்காக அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட இனவாத அமைப்பே இந்த பொதுபலசேனா என்ற அமைப்பு. இந்த அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினையை ஏற்படுத் தக்கூடும்.


1915 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் வாழ்ந்த சக்திவாய்ந்த இனமாக முஸ்லிம், தமிழ் இனங்கள் காணப்படுகின்றன. எனவே இந்த நாட்டை யாரும் சொந்தமாக்கி விட முடியாது. இவ்வாறிருக்க பொதுபலசேனாவினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பௌத்த இனவாதத்தை உடனடியாக நிறுத்த வேண்டும்.

முஸ்லிம்களுக்கோ கிறிஸ்தவர்களுக்கோ எதிராக பௌத்த பிக்குகள் செயற்படக்கூடாது. மாறாக குடும்ப ஆட்சிபுரியும் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிராக வீதிக்கு இறங்கிப் போராடுவதே சிறப்பானதாக இருக்கும்.

அதனை விடுத்து பௌத்த பிக்குகள் தேவையில்லா விடயங்களில் ஈடுபடக்கூடாது எனத் தெரிவித்துள்ளார். (அ-2)










பல்துறை வல்லோன் கலாநிதி த. கலாமணியின் மணிவிழா நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட [illegible]ங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தாய் தந்தையின் அன்புப் பிடியில் பாலச்சந்திரன்

"அவன் ஒரு தனிமை விரும்பி. புத்தகம் வாசிப்பதிலும் நீச்சலிலும் பெருமளவு நேரத்தினை செலவிடுவான். நன்றாகப் படிப்பான். பிறந்ததிலிருந்தே ஆயுதங்களைப் பார்த்ததினால் ஆயுதங்களை அவன் விரும்புவதில்லை. ஒருமுறை தலைவரின் துப்பாக்கியை தண்ணீரில் தூக்கிப் போட்டுவிட்டான். தலைவர் சிரித்துக் கொண்டே அதை எடுத்து கழட்டி துடைத்தார்."

# போராடுவது ஒவ்வொரு உயிருக்குமான பிறப்புரிமை

## –பாலச்சந்திரனின் பாதுகாவலர் பேட்டி!

உலகத் தமிழர்களிடையே இந்தப் பெயர் ஏற்படுத்தாத அதிர்வலைகளே இல்லை எனலாம். பாலச்சந்திரனின் மரணம் தமிழ் மக்களிடையே எந்த அளவிற்கு விசும்பலை ஏற்படுத்தியுள்ளதோ அந்தளவிற்கு சிதறிக் கிடந்த அவர்களை ஒன்றிணைந்துள்ளது. அதற்கு ஜெனீவா நகரில் நடந்த சூரசம்ஹாரமே சாட்சி.

ஜெனீவாவில் இலங்கை அரசை சூரனாகவும் பிரபாகரனை முருகனாகவும் கொண்டு புலம்பெயர் தமிழர்கள் நடத்திய நிகழ்வில் பிரிந்து கிடந்த புலிகள் தங்களுக்குள்ளே அறிமுகம் செய்து கொள்ள புதிய திட்டம் அங்கு பிறந்தது. முள்ளிவாய்க்காலில் நடந்த சம்பவங்களை தங்களுக்குள் பரிமாறிக் கொள்ள இது நடந்திருக்குமோ? இதெல்லாம் நடந்திருக்குமோ? என்ற விடை தெரியாத பல கேள்விகளுக்கு அங்கு விடை தெரிந்துள்ளது.

இன்றும் இவர் இருக்கிறார். அவர் இருக்கிறார் என ஆச்சரியமூட்டும் பல பதில்கள் அங்கு கிடைத்துள்ளன. மீண்டும் எங்கு நாம் கூடலாம்? இனி நாம் என்ன செய்ய வேண்டும்? எவ்வாறு இயங்க வேண்டும்? என்பது மாதிரியான சில முக்கிய முடிவுகளும் புலிகள் மத்தியில் எடுக்கப்பட்டுள்ளன.

சூரசம்ஹாரத்தில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் நம்முடன் பகிர்ந்து கொண்டது...

தலைவரிடமிருந்து கட்டளை வரும். அதன் பின் வாருங்கள் என்று வந்த ஆணைப்படி முள்ளிவாய்க்காலிருந்து வெளியேறிய நாங்கள் இப்பொழுது இங்கு இருக்கிறோம். இறுதிக் கட்டத்தில் நடந்தது என்ன? சிங்கள அரசும் சிலரைத்தான் கொன்றதாகக் காண்பித்தது. என்னுடன் களமாடிய தம்பிகளைக் காணவில்லை. அப்பொழுதுதான் ஒன்று விளங்கியது. தலைவர் எங்களை அனுப்பியது போல் மற்றவர்களை அனுப்பியிருக்கலாமே? அது இங்கு கூடி நிற்கும் என் தம்பிகளைப் பார்த்து புரிந்தது; என்னைப் போல் அவர்களும் வந்துள்ளதாக. தலைவர் தீர்க்கதரிசி. உலக மக்களின் எழுச்சி தமிழீழத்தைப் பெற துணை நிற்கும்! என்று அன்றே கூறினார். அது இன்று நடக்கிறது.

✱ உங்களைப் பற்றி கூறுங்களேன்?

நான் தமிழில் பாண்டித்தியம் பெற்றவன். போராடுவது ஒவ்வொரு உயிருக்குமான பிறப்புரிமையாகும். விலங்குகளாகட்டும். மனிதர்களாகட்டும். தத்தமது தேவைகளையும் உரிமைகளையும் பெற்றுக் கொள்வதற்கும் நிலை நிறுத்துவதற்கும் ஏதோவொரு வழிமுறையில் போராடித்தான் பெற வேண்டியுள்ளது. நானும் அப்படியே. இன விடுதலைக்காக ஏதாவது செய்யலாம் என நித்தமும் நான் குழம்பிக் கொள்வேன். நான் இருந்த சுதுமலையில் தலைவரின் கூட்டம் நடந்தது. தலைவரைக் காணப் பயம் எனக்கு. தலைவரிடம் அறிமுகப்படுத்தினான் என் அண்ணன். பயத்துடனே தலைவரும் தமிழும் கவிதையை வாசித்தேன். தலைவரின் கை என் மீது பட அதுவரை என்னுள் இருந்த பயம் ஓடி ஒளிந்தது. பின்னாளில் தலைவரின் இளைய மகன் பாதுகாப்பிற்கு நான் பணியமர்த்தப்பட்டேன்.

✱ பாலச்சந்திரன் பற்றி?

தலைவரின் மகன் என்பதால் 5 புலிகள் காவல். ஐந்தில் ஒருவன் நான். தலைவர் தமிழ் சொல்லிக் கொடுக்கச் சொன்னார். நானும் சொல்லிக் கொடுத்தேன். அவன் ஒரு தனிமை விரும்பி. புத்தகம் வாசிப்பதிலும் நீச்சலிலும் பெருமளவு நேரத்தினை செலவிடுவான். நன்றாகப் படிப்பான். கற்பூர புத்தி. நன்றாக நீச்சல் அடிப்பான். அம்மா ஊட்டும் சாப்பாடு பிடிக்காது. நண்டுக்கறி, வறுவல், இடியப்பம் ரொம்பவும் பிடிக்கும். எங்களுடன் சாப்பிடுவதில் பிரியம் அவனுக்கு. பிறந்ததிலிருந்தே ஆயுதங்களைப் பார்த்ததினால் ஆயுதங்களை அவன் விரும்புவதில்லை. ஒருமுறை தலைவரின் துப்பாக்கியை தண்ணீரில் தூக்கிப் போட்டுவிட்டான். தலைவர் சிரித்துக் கொண்டே அதை எடுத்து கழட்டி துடைத்தார். முக்கியமான ஒன்று, அவனுக்கு அண்ணனைப் போல் அக்காவைப் போல் போராட்ட குணமில்லை. அப்படிப்பட்ட ஒன்றும் தெரியாத அப்பாவியைக் கொன்றதுதான் வேதனை. அவனின் சில புதுப்படங்களையும் உங்களுக்கு அனுப்பியுள்ளேன்.





இந்த அப்பாவி சிறுவனைத்தான் கிடாய் ஆட்டை இறைச்சிக்காக கொல்வதற்கு முன் அதற்கு முருக்கங்குழை கொடுப்பது போல் எதையோ சாப்பிடக் கொடுத்துவிட்டு பாவிகள் அவனை சுட்டுக் கொன்றுள்ளார்கள். தனக்கு நடக்கப் போவது எதையுமே அறியாமல் அந்தப் பாலகன் கொடியவர்கள் கொடுத்ததை கொறித்தபடி அங்குமிங்கும் வேடிக்கை பார்த்தபடி இருந்திருக்கிறான். எவ்வளவு கொடுமை? ஒரு பிஞ்சு உயிரை நேருக்குநேர் நின்று சுட்டுக் கொல்வதற்கு எப்படி மனம் வந்தது இவர்களுக்கு?

நாங்கள் தீவை விட்டு வெளியேறியபொழுது ஒவ்வொரு இராணுவத்தினரிடமும் தலைவரின் குடும்பப் புகைப்படம் பெரிய அளவில் கொடுக்கப்பட்டிருந்தது. அதை வைத்துத்தான் தம்பியை அடையாளம் கண்டிருப்பார்கள் என்று நினைத்திருந்தேன். இப்பொழுதுதான் எங்களுக்குள் பேசிக் கொண்டதால் ஒன்று எமக்கு விளங்கியது. பாலச்சந்திரனின் மரணம் விடுதலைப் புலிகளுடன் பிரிந்து சென்று அரசுடன் இணைந்து நிற்கும் ஒருவரின் கண் முன்னே நடந்திருக்கிறது.

✱ உங்களின் அடுத்தகட்ட நகர்வு?

உத்தரவுக்காக காத்திருக்கிறோம்.

✱ ✱ ✱

தமிழகத்திலிருந்து வெளிவரும் நக்கீரன் இதழிலிருந்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

09



இரவின் அந்தகார இருளில் ஆழ்ந்து கிடந்த மருத்து மாமலைவனத்தின் அமைதியை உதயவல்லி குலைத்தார்.

"மன்னரே வருக..."

"மாமலைவனத்து மலர் கொடிகள் இவ்வளவு அழகாக இடை நெளித்து நிற்குமா?"

"மன்னரா... இதென்ன புதுவிளிப்பு?"

"மன்னரை எப்படி அழைப்பதாம்?"

"யார் சொன்னார்கள்?"

பரவை சொன்னாள்.

"எவ்வளவு வேகமாகக் கதை பரவுகிறது? வேறு என்ன சொன்னாள்"

"அவ்வளவுதான்"

"உன் சிநேகிதிதானே பரவை. அவளுக்கு பதவியா வன்னிமை உலோகநாக தொண்டநாயக்கனை முற்றாக்கியுள்ளோம். நிச்சயம் செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாண அரசின் பெயரால் தற்க விகாரை ஒன்றினையும் அங்கு தண்டநாயக்கன் அமைத்துள்ளான்"

உதயவல்லி கலகலவெனச் சிரித்தாள்... "ஏமாற்றம்"

"யாருக்கு?"

"உங்களுக்கு பதவியா வன்னிமைக்கும் பரவை உங்கள் நண்பர் கனகராஜனை விரும்புகிறாள். அதுமட்டுமா இருவருக்கும் எங்க மாதிரி தொடர்பாம்"

சங்கிலி திகைப்புற்றான். அவளை நோக்கினான்.

கருநாகமென நெளிந்து கிடந்த பின்னலை கரத்தில் பற்றி முறுக்கியபடி நின்ற உதயவல்லியின் தோற்றம் அவனை ஒரு கணம் கவ்விஇழுத்தது. உடலோடு அணைந்து கிடந்த மல்மல் பட்டின் பளபளப்பு அவள் உடல் வளைவில் அற்புதங்களைக் காட்டின.

உதயா. பிரேமையின் அழைப்பா அவன் நெஞ்சிலிருந்து வார்த்தைகள் வெளிவந்தன.

"பிரபு. எனக்கொரு சத்தியம் செய்து தருவீர்களா?"

"என்னையே உனக்குத் தந்த பின் ஒரு சத்தியம் செய்வது பெரிதா? கேள் உதயா... ஒருவரில் நம்பிக்கை குறையும் போது சத்தியம் கேட்பார்களாம். அது போல"

"அப்படி ஒன்றுமில்லை... உங்கள் மீது பரிபூரண நம்பிக்கையுள்ளது. என் திருப்திக்காக சத்தியம் வேண்டாம்... ஒரு வாக்குறுதி தாருங்கள்"

"என்னவென்று உதயா?"

"நீங்கள் மன்னரானால் நீயே என் பட்டத்து ராணி என்று"

"பைத்தியமே இவ்வளவு தானா? நீ பட்டமகஷியானால் தான் நான் அரசனாவேன். போதுமா?"

"அவ்வளவே"

அடிவளவில் அந்த நாயின் ஊளை அன்றும் எழுந்தது.



## சங்கிலி அளித்த வாக்குறுதியும் மந்திரிமனை குழப்பமும்



-செங்கை ஆழியான்-

அரண்மனைக்கு முன்னால் ராசவீதி வடக்கு நோக்கிச் சென்றது. அந்த வீதியின் மேற்குப் பக்கத்தில் அமைந்த மாளிகை மந்திரிமனையாகும். பரநிருசிங்கர் அந்த மாளிகையை தனதாக்கியிருந்தார். இன்று அம்மாளிகைதான் பெயருக்கு ஏற்ப மந்திரி மனையாகப் போகின்றது. சங்கிலி மன்னனாக முடிபுனைந்தால் பரநிருபசிங்கர் மந்திரியாக அமர்வார். உதயவல்லியும் சங்கிலியும் குலாவிக்கொண்டிருந்தபோது பரநிருபசிங்கர் மாளிகையில் அவரது மனைவி மாதவிதேவியாலும் மகன் பரராசசிங்கனாலும் புதிய பிரச்சினை கிளம்பியது. அவர் மனம் குழம்பித்தவித்தது.

"நீங்கள் செய்தது மகா துரோகம். பெற்ற மகனுக்கே துரோகம் செய்துவிட்டீர்கள்" என்று மாதேவி குமுறினாள்

"நானா துரோகம் செய்தேன். சிந்தித்துப் பார்த்தால் உண்மை தெரியும்"

"சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது. நீங்கள் செய்த தற்க என்ன பெயர்"

"எனது மகன் உயிரோடு வாழவேண்டும்"

"மகனின் நன்மை கருதியிருந்தால் உங்களுக்கு உரிமையான அரசை தம்பிக்கு விட்டுக் கொடுப்பீர்களா? உங்களுக்கு ஆளப்பயமில்லை என்றால் மகனுக்குமா இல்லை? யாழ்ப்பாண சிம்மாசனத்தில் அமர வேண்டிய மகன்" (தொடரும்)

# பாவம் ஓரிடம், பழி ஓரிடம்! இரண்டு அதிகார மையங்கள்!

"வால் அறுந்த நரி, மற்ற நரிகளிடம் இப்படித்தான் இருக்கவேண்டும், இதுதான் நமக்கும் அடுத்த தலைமுறைக்கும்கூட நன்மை தரும்" என்று மற்ற நரிகளையும் வாலை வெட்டிக்கொள்ள அறிவுரை சொன்ன கதையாக, இரட்டை அதிகார மையங்கள்தான் மக்களாட்சிக்கு நல்ல முன்மாதிரி என்று சொல்கிறது காங்கிரஸ் கட்சி.

இரட்டை அதிகார மையங்கள் என்று இவர்கள் குறிப்பிடுவது– பிரதமர் மன்மோகன் சிங்கையும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியையும்!

இதன்மூலம் அவர்கள் ஒரு உண்மையை– எல்லாருக்கும் தெரிந்ததுதான் என்றாலும்– வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார்கள். மன்மோகன்சிங் அதிகாரப்பூர்வமான பிரதமர். சோனியா காந்தி பின்னணியில் இருந்து அவரை இயக்குபவர்.

இந்தியப் பிரதமர் அலுவலகம் ஒரு அதிகார மையம். நெ.10 ஜன்பத் சாலையிலுள்ள சோனியா காந்தியின் வீடு இன்னொரு அதிகார மையம்.

சோனியா காந்தி, அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர். அத்துடன் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கும் அவர்தான் தலைவர். இது அரசியல் சார்ந்தது. இதற்கும் நிர்வாகத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அவர் பிரதமர் பதவிக்காக இந்திய இரகசிய காப்பு உறுதிமொழி ஏற்றுக்கொண்டு நிர்வாகப் பொறுப்பை நடத்துபவர் அல்ல. அப்படியிருக்கும்போது அவரை ஏன் ஒரு அதிகார மையமாக நாமும் ஏற்க வேண்டும்? என்கிறது காங்கிரஸ்.

ஏன் காங்கிரஸ் தலைமைக்கு மட்டும் அதிகாரப் பகிர்வு? கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவருக்குமே இந்த அதிகாரப் பகிர்வை வழங்கலாமே? முழுநீள நகைச்சுவையாக மாறுமே!

திரைப்பட இயக்குநர் தாசரி நாராயண ராவ் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு எம்.எல்.ஏ. ஏடுகொண்டலு என்று ஒரு படம் எடுத்திருந்தார். அதில் ஆட்சிக் கவிழ்ப்பு செய்யும் கதாநாயகன், தன்னைப் பிரதமராகவும் தன்னை ஆதரிக்கும் அனைத்து எம்.பிக்களையும் துணைப் பிரதமராகவும் அறிவிக்கும் அங்கம்தான் உச்சபட்சமான நகைச்சுவை. அதையெல்லாம் விஞ்சிவிட்டது காங்கிரஸ் கட்சியின் அறிவிப்பு.

இந்த விசுவாசிகள் சொல்ல விரும்புவது இதைத்தான். சோனியா எப்படி மறைமுகமாக அதிகார மையமாக இருக்கிறாரோ அதேபோன்று எதிர்காலத்தில் ராகுல் காந்தியும் அவர் பிரதமர் பதவி வகித்தாலும் வகிக்காவிட்டாலும் அதிகார மையமாகச் செயற்படுவார்!


பாஜக ஆட்சியின்போது அன்றைய பிரதமர் வாஜ்பாயிக்கு மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை நடந்ததால் அவருடைய உடல்நிலை பிரதமருக்கான அவசியப் பணிகளில் ஈடுபட முடியாத நிலையை உருவாக்கியது. அப்போது துணைப் பிரதமராக எல்.கே. அத்வானி பொறுப்பு ஏற்றார்.

இத்தகைய சட்டப்படியான பொறுப்பை சோனியா காந்தியோ அல்லது ராகுல் காந்தியோ ஏற்பதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால், எந்தப் பொறுப்பையும் ஏற்காமல் பின்னிருக்கையில் அமர்ந்துகொண்டு வாகனத்தை இயக்குவதைப்போல ஆட்சியையும் நடத்த வேண்டும் என்று நினைப்பது எதற்காக?

இதற்கு ஒரே ஒரு காரணம் மட்டுமே இருக்க முடியும்.

அணுஉலைகள் ஒப்பந்தத்திலும் தொழில் ஒப்பந்தங்களிலும் நிச்சயமாக சோனியா கையெழுத்திட முடியாது. பிரிக்ஸ் மாநாட்டிலும் காமன்வெல்த் மாநாட்டிலும் இந்தியாவின்





பிரதிநிதியாக சோனியா காந்தி செல்ல முடியாது.

வெளிநாட்டவர் இந்தியாவுக்கு வருகை தந்தால் விமான நிலையம் சென்று வரவேற்க வேண்டியவர் மன்மோகன் சிங்தான். இதற்கெல்லாம் சோனியா காந்தி செல்ல முடியாது. ஆனால், 2 ஜி அலைக்கற்றை ஊழலுக்கு சோனியா காந்தி பொறுப்பாக மாட்டார்.

நிலக்கரிச் சுரங்க வயல்கள் ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்திருந்தால் அதற்கு சோனியா காந்தி பொறுப்பாக மாட்டார். சொகுசு ஹெலிகப்டர் ஊழல் குறித்த கேள்விகள் அவரிடம் கேட்கப்பட மாட்டாது. உத்தரப் பிரதேச மாநிலத்துக்கு மட்டும் ஏன் அபரிமிதமான நிதி ஒதுக்குகிறீர்கள்? என்று சோனியாவிடம் கேட்க முடியாது. இவை எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல வேண்டியவர் மன்மோகன் சிங்தான்.

இந்த ஆட்சியில் நடந்த ஊழல்கள் நிரூபிக்கப்பட்டு கைது செய்யப்படும் நிலைமை வந்தாலும் சோனியா காந்தியை கைது செய்ய முடியாது.

பாவம் ஓரிடம், பழி ஓரிடம். மக்கள் ஆட்சியில் இதற்குப்பெயர் இரண்டு அதிகார மையங்கள்!

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தவறான முடிவுகளுக்கு மன்மோகன்சிங் தலையில் முள்மகுடம்; சிறப்பாக முடிவுகளுக்குக் கிடைத்த வெற்றிகள் மட்டும் சோனியா காந்தியின் தலைமைக்கும் மலர்மகுடம்.

இதுபோன்று இரு அதிகார மையங்கள் மன்னராட்சியில் இருந்ததையும் அரச முடிவுகள் மன்னரின் அவைக்கு அப்பால் எடுக்கப்பட்ட கதைகளையும் சரித்திரங்கள் கூறுகின்றன. ஆனால், முடிவுகள் தவறாகப் போகும்போது இரண்டு அதிகார மையங்களின் தலைகளும் உருண்டன என்பதைத்தான் சரித்திரங்களில் காண்கிறோம். ஆனால், மக்களாட்சியில் ஒரு தலைக்கு சட்டம் விதிவிலக்கு அளிக்கிறது.

இரண்டு அதிகார மையங்கள் என்பது மாநிலங்களிலும்கூட இருந்திருக்கிறது.

சட்டச் சிக்கல்களால் முதல்வர் பதவி வகிக்க முடியாத சூழ்நிலையில் தமிழ்நாடு பிகார் ஆகிய மாநிலங்களில் இரு அதிகார மையங்கள் ஏற்பட்டன. தமிழ்நாட்டில் ஓ. பன்னீர்ச்செல்வம் முதலமைச்சராகப் பதவி வகித்தார்.

-இணையம்-

பிகாரில் வாலு பிரசாத்தின் மனைவி ராப்ரி தேவி முதல்வராகப் பதவியேற்றார். ஆனால், இந்த இரு விவகாரங்களிலும் முதல்வர் பதவி வகித்தவர்கள் உலகறிய வெளிப்படையாகவே சொன்னார்கள். தாங்கள் வெறும் நிழல் என்றும் தலைமைதான் நிஜம் என்றும்! இந்த வெளிப்படைத்தன்மைக்காக அவர்களை நாம் பாராட்டலாம். பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இத்தகைய நேர்மை தேவை.

நிழலா நிஜமா? அவர்தான் சொல்ல வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கை குறிவைக்கும் சீனாவின் புலனாய்வு அமைப்பு!

கடந்தவாரம் சீனாவின் உதவி அரச பாதுகாப்பு அமைச்சர் சோயுகுயிங் இலங்கைக்குப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். கடந்த ஆண்டு சீனாவின் தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜெனரல் லியாங் குவாங்லி, இலங்கைக்கு மேற்கொண்டிருந்த பயணத்தை அடுத்து, இலங்கைக்கு வந்த சீனாவின் உயர்நிலைப் பாதுகாப்பு அதிகாரி இவரேயாவார்.

சீனாவின் உதவி அரச பாதுகாப்பு அமைச்சர் குய்ங்கிற்கு இலங்கை அரசாங்கம் அதிகளவு முக்கியத்துவம் கொடுத்திருந்தபோதும், அவர் யார் என்பது ஊடகங்களால் சரியாக அடையாளம் காணப்படவில்லை.

இவர் முதலில் திருகோணமலைக்குச் சென்று இரண்டு நாட்கள் தங்கியிருந்தார். அங்கு இலங்கைக் கடற்படையின் கிழக்குத் தலைமையகம் அமைந்துள்ள டொக்யாட்டில், அதிகாரிகளுடன் ஆலோசனைகளில் ஈடுபட்டதுடன், கடற்படை அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டிருந்தார்.



திருகோணமலை துறைமுகத்தை படகில் முற்று முழுதாக ஆய்வு செய்த அவர், சீனக்குடா விமானப்படைத் தளத்தையும் பார்வையிட்டு, விமானப்படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார். சீனக்குடா என்ற பெயரும் சீனாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லாத போதிலும், சோயு குய்ங்கின் இந்தப் பயணம் சீனக்குடாவுக்கும் சீனாவுக்கும் இடையில் புதிய முடிச்சுக்களைப் போடுவதற்கான பிள்ளையார் சுழியாக அமையுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

வான்புலிகளை எதிர்கொள்ள சீனா கொடுத்த முப்பரிமாண ரேடர்இங்குதான் நிறுவப்பட்டுள்ளது. போரின் இறுதிக் கட்டத்தில் தப்பிச் செல்வதை தடுப்பதற்கு இலங்கை விமானப்படையிடம் உள்ள, சீனாவில் தயாரிக்கப்பட்ட எவ்-7 ஜெட்போர் விமானங்கள் சீனக்குடாவில்தான் நிலை கொண்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் பயன்படுத்திய கரும்புலித் தாக்குதல் படகையும், சீன உதவி அமைச்சர் சோயு குயிங் பார்வையிட்டிருந்தார். (சீன உதவிப்பாதுகாப்பு அமைச்சரை வியக்க வைத்த கரும்புலிப்படகு) அதன் பின்னர் விமானத்தில் பலாலிக்குச்சென்ற சீன உதவி அமைச்சருக்கு அங்கும் நல்ல வரவேற்பு அளிக்கப்பட்டது. யாழ்படைத் தளபதி மேயர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவுடன் சோயு குய்ங் மற்றும் ஆறு அதிகாரிகளும் பேச்சு நடத்தியிருந்தனர். பின்னர் விமானப்படை ஹெலிகொப்படரில் யாழ். கோட்டைக்கு சென்று பார்வையிட்ட அவர்கள் கொழும்பு திரும்பி பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை சந்தித்துப் பேசியிருந்தனர்.

இருதரப்பு ஆர்வமுள்ள விவகாரங்கள் குறித்து பேசப்பட்டதாக கூறப்பட்ட போதிலும், உண்மையில் என்ன பேசப்பட்டது, எதற்காக சீன அமைச்சர் இலங்கை வந்தார் என்ற விபரங்கள் ஏதும் அதிகாரபூர்வமாக வெளிப்படுத்தப்படவில்லை. அவர் எப்போது வந்தார், எப்போது திரும்பினார் என்ற விபரங்களைக் கூட இலங்கை பாதுகாப்புத் தரப்பு வெளிப்படுத்தவில்லை. ஆனால், ஒரு விடயத்தைக் கவனிக்கவேண்டும். இந்தப் பயணத்தை இலங்கை அரசாங்கம் நினைத்திருந்தால் இரகசியமாகப் பேணியிருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்யவில்லை. அதற்குக் காரணம் உள்ளது.

சீன உதவி அமைச்சர் தலைமையிலான குழுவின் பயணம் இடம்பெற்றதை வெளிப்படுத்தியுள்ள போதிலும், எதற்காக அவர்கள் வந்தனர் என்று வெளிப்படுத்தாததன் மூலம் பலரது தலையைப் பிய்க்க வைத்துள்ளது இலங்கை அரசாங்கம். காரணம், சீனாவின் அரச பாதுகாப்பு அமைச்சு என்பது சீனாவின் மிக முக்கியமானதொரு அமைப்பு. இதன் கட்டளை அமைப்பில் இரண்டாம் நிலையில் உள்ள அமைச்சர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருப்பதை, இந்தியா, அமெரிக்கா, போன்ற இலங்கை மீது ஆர்வமுள்ள நாடுகளால் இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாது.

சீனாவின் பாதுகாப்பு கட்டமைப்பை விளங்கிக் கொள்ளாமல், இந்தப் பயணத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவது கடினம். சீனாவில் பாதுகாப்புத்துறை சார்ந்து மூன்று அமைச்சுக்கள் உள்ளன.

முதலாவது: தேசிய பாதுகாப்பு அமைச்சு, இதன்கீழ்தான் செஞ்சேனை எனப்படும் சீனாவின் முப்படைகளும் உள்ளன.

இரண்டாவது: அரச பாதுகாப்பு அமைச்சு. இதுவே சீனாவின் முதன்மையான புலனாய்வு அமைப்பு. இதன் பிரதானமான கடமை வெளியகப் புலனாய்வுப் பணிகளை மேற்கொள்ளவதாகும். இந்தியாவின் றோ எனப்படும் ஆய்வு மற்றும் பகுப்பாய்வு அலகு. அமெரிக்காவின் சி.ஐ.ஏ.எனப்படும் மத்திய புலனாய்வுப் பிரிவு போன்றவற்றுக்கு இணையாக இது செயற்படுகிறது. சுருக்கமாக இது எம்.எஸ்.எஸ். என்று அழைக்கப்படுகிறது.

மூன்றாவது: பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு. இது சீனாவின் பொலிஸ் துறைக்கு பொறுப்பாக உள்ளது. உள்நாட்டு பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கைப் பேணுவது இதன் பொறுப்பு.

இலங்கையைப் பொறுத்தவரையில், இந்த மூன்று துறைகளுமே, அதாவது பொலிஸ், முப்படைகள், மற்றும் புலனாய்வுத்துறைகள் என்பன கோத்தபாய ராஜபக்சவின் கீழ் உள்ள பாதுகாப்பு அமைச்சின் கீழேயே செயற்படுகின்றன. சீனாவில் இவை தனித்தனி அமைச்சுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் இலங்கைக்கு வந்து சென்ற சோயு குய்ங் சீனாவின் அரச பாதுகாப்பு அமைச்சின் உதவியமைச்சராக 1983 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த அமைச்சு சீனாவின் வெளியகப் புலனாய்வுப் பணிகளை மேற்கொள்ளும் ஒரு அமைப்பு மட்டுமல்ல, அது, சீனாவுக்குள்ளேயும் சக்தி வாய்ந்த ஒன்று.

சீன பொலிசுக்கு உள்ளதுபோன்ற அதிகாரங்கள் இதற்கும் உள்ளது.

சந்தேகநபர்களை கைது செய்து விசாரிக்க, தடுத்துவைக்க, நீதிமன்றத்தில் நிறுத்த- இந்த அமைச்சுக்கு அதிகாரம் உள்ளது.

சீனாவின் வலுவான அமைச்சு ஒன்றின் உதவி அமைச்சரே இலங்கைக்கு வந்து சென்றுள்ள போதிலும், அதற்கு அவ்வளவாக ஊடக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. அதேவேளை, இந்தச் செய்தி அடக்கி வாசிக்கப்படவும் இல்லை.

அதற்குக் காரணம் உள்ளது:

அடக்கி வாசிக்கப்பட்டதால், சீனாவின் அரச பாதுகாப்பு உதவி அமைச்சரின் பயணத்தை மிகச் சாதாரணமாக எடுத்துக் கொண்டவர்களே அதிகம் பெயர். இவரது பதவிப் பொறுப்பு என்ன என்பது குறித்தோ, அதன் முக்கியத்துவம் குறித்தோ, பல ஊடகங்கள் தவறான தகவல்களையே வெளியிட்டன. அதுகூட இந்தப் பயணத்தின் முக்கியத்துவம் பெரிதாக உணரப்படாமைக்கு ஒரு காரணம்.

இலங்கைக்கும சீனாவுக்கும் உள்ள நெருக்கம் மிகவும் ஆழமானது. அது நாளுக்குநாள் விரிவாக்கம் பெற்றுவருவது யாவரும் அறிந்ததே. சீனாவைப் பொறுத்தவரையில், இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, இந்த மூன்று நாடுகளையும் தனக்குச் சவாலான சக்திகளாக கருதுகின்றன. இந்த மூன்று நாடுகளும் இலங்கையுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருப்பதும், சீனா அவற்றைவிட அதிக தொடர்பைக் கொண்டிருப்பதும் முக்கியமான விடயங்கள்.

அண்மையில் இலங்கையுடன் ஜப்பான் செய்து கொண்ட கடல்சார் உடன்படிக்கை, இந்திய பெருங்கடலில் சீனாவின் தலையீட்டை குறைப்பதை அடிப்படையாக கொண்டது. அந்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டு ஒருமாதம் கூட ஆகாத நிலையில்தான் சீன அரச பாதுகாப்பு உதவி அமைச்சரின் பயணம் இடம்பெற்றுள்ளது. தென்சீனக் கடலிலும், பசுபிக் பிராந்தியத்திலும் சர்ச்சைக்குரிய தீவுகள் விவகாரத்தில் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் ஒரு பனிப்போரே நடந்துகொண்டிருக்கிறது. அதேவேளை, இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான பனிப்போர், மிகப் பிரபலமான ஒன்று.

இந்தியப் பெருங்கடலில் இந்தியாவினதும் அமெரிக்காவினதும் ஆதிக்கத்தை உடைக்க, சீனா பெரும் வியூகத்தை வகுத்து காய்களை நகர்த்தி வருகிறது. சீனாவின் முதல் விமானந்தாங்கி கப்பல்கூட இந்தியப் பெருங்கடலில்தான் நிலை கொள்ளப்போகிறது. இவ்வாறு இந்தியப் பெருங்கடலில் அதிகரித்து வரும் சீனத் தலையீட்டை முறியடிக்க இந்தியாவும் தன்பங்கிற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறது.

சீனாவின் நீர்மூழ்கிகளை எதிர்கொள்ளும் வகையில் விசாகப்பட்டினத்துக்கு அருகே நிலத்துக்கடியிலான நீர்மூழ்கித் தளம் ஒன்றை அமைக்கும் பணிகளை இந்தியா தீவிரப்படுத்தியுள்ளதாக அண்மையில்தான் செய்திகள் வெளியாகின. இத்தகைய சூழலில் தான் சீன உதவி அமைச்சரின் பயணம் இடம்பெற்றுள்ளது. இந்தியாவை உளவு பார்ப்பதற்கான ஒரு தளமாக, இலங்கையை சீனா பயன்படுத்தி வருகிறது என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல. அதுவும், இலங்கைக்கு நெருக்கமாக உள்ள விசாகப்பட்டினம் கிழக்கு கடற்படைத் தலைமையகமும், கிழக்கு கடலோரப் பகுதிகளில் உள்ள றொக்கெட் ஏவுதளங்களும் சீனாவின் கவனத்துக்குரிய முக்கிய இலக்குகளாகும். இந்தியாவின் நீர்மூழ்கிகளின் பிரதான தளமாக விசாகப் பட்டினமே உள்ளது. இங்கிருந்து இந்திய கடற்படைக்கான ஏவுகணைகள் பரிசோதிக்கப்படுகின்றன.

அதேவேளை, ஒறிஸ்ஸாவின் வீலர் தீவு, சந்திப்பூர் ஆகியன இந்தியாவின் முக்கியமான ஏவுகணைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் ஏவுதளங்களாக உள்ளன. இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி ஏவுகணைகள் அனைத்தும் ஆந்திராவின் சிறிஹரிகோட்டாவில் இருந்தே ஏவப்படுகின்றன. இவையெல்லாம் சீனாவால் உன்னிப்பாக கண்காணிக்கப்படும் இலக்குகளாகும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அந்தமான் தீவுகளுக்கு அருகே மீன்பிடிப்படகு போன்று வடிவமைக்கப்பட்ட சீனாவின் உளவுக்கப்பல் ஒன்றை இந்தியக் கடற்படை துரத்திச் சென்ற போது, அது கொழும்புத் துறைமுகத்தில் அடைக்கலம் தேடிக்கொண்டதாக செய்திகள் வெளியானது நினைவிருக்கலாம். கடலின் தன்மையையும், இந்தியாவின் கிழக்கு கடற்பகுதியில் உள்ள ஏவுதளங்களையும் கண்காணிக்கும் பணியில் அந்தக்கப்பல் ஈடுபடுத்தப்பட்டதாகவே கருதப்பட்டது. இந்தியாவை உளவு பார்க்க இலங்கையை மட்டுமன்றி, நேபாளத்தையும் கூட சீனா பயன்படுத்திக் கொள்கிறது. நேபாள எல்லையில் 11 புலனாய்வு தகவல் நிலையங்களை சீனா அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த நடவடிக்கைகளுக்கெல்லாம் பொறுப்பாக இருப்பது சீனாவின் அரச பாதுகாப்பு அமைச்சுத்தான். இந்தியாவின் பாதுகாப்பு இரகசியங்களை இந்தப் பிரிவு பல்வேறு வழிகளில் பெற்றுக்கொள்கிறது.

மரபு சார்ந்த வழிமுறைகளை மட்டுமன்றி, இணையவழி சைபர் தாக்குதல்கள் மூலம், இந்தியாவின் முக்கிய பாதுகாப்புக் கட்டமைப்புகளினுள் ஊடுருவியும் பெருமளவு இரகசியங்களையும் சீன உளவுப்பிரிவு களவாடியுள்ளது. அண்மையில் , இஸ்ரோ எனப்படும் இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி பிரிவு, மற்றும் ஏவுணைகளை வடிவமைக்கும் பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் ஆகியவற்றின் இரகசியங்கள் கூட திருடப்பட்டன. தமது பெருமளவு பாதுகாப்பு இரகசியங்களை சீனா திருடியுள்ளதாக அண்மையில் இந்தயா குற்றம் சாட்டியது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவுக்கும்கூட, சீனாவின் இத்தகைய நெருக்கடிகள் இருக்கவே செய்கிறது. இவை அனைத்துமே, சீனாவின் அரச பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் கிளை அமைப்புகளால்தான், வழிநடத்தப்படுகின்றன. இத்தகைய- மிகவும் வலுவான அமைப்பு ஒன்றின் இரண்டாவது பொறுப்பு வாய்ந்த அதிகாரியின் இலங்கைப் பயணத்தை இந்தியாவோ அமெரிக்காவோ ஏன் ஜப்பான்கூட அவ்வளவு இலகுவாக எடுத்துக் கொள்ளாது. அம்பாந்தோட்டையில் மட்டுமன்றி, சீனப் புலனாய்வு முகவரமைப்பு இப்போது திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்தின் மீது கண்வைக்கத் தொடங்கியுள்ளது என்பதை, இவரது பயணத்தின் மூலம் உணர முடிகிறது. இந்தப் பயணம் இந்தியாவைக் குறிவைத்த நகர்வாகவே கருதப்படுகிறது. இது இந்தியாவுக்கு எரிச்சலூட்டுகின்ற ஒரு நடவடிக்கையாகவே இருக்கும். ஜெனிவாவுக்குப் பின்னர், இந்திய- இலங்கை பாதுகாப்புச் செயலர்கள் நிலையிலான கலந்துரையாடல் பிற்போடப்பட்ட சூழலில், சீன புலனாய்வு அமைப்பின் உயர் தலைவரின் இலங்கை வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மேலும் கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரியின் மருத்துவ பீடத்துக்கான 702 படுக்கைகள் கொண்ட போதனா மருத்துவமனையின் கட்டுமானப்பணிகளையும் கூட சீனாவிடம்தான் ஒப்படைத்துள்ளார் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச. இவையெல்லாம் சீனத் தலையீடுகள் இலங்கையில் வலுவாகி வருவதன் அடையாளங்கள்.

இலங்கை - சீன நெருக்கம் இந்திய, அமெரிக்க நாடுகளுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் என்று தெரிந்திருந்த போதிலும், அதை இலங்கை திரும்பத் திரும்பச் செய்து வருவதுதான் ஆச்சரியம். சீனாவுடனான நெருக்கத்தை காரணம் காட்டி இந்த நாடுகளை மடக்கலாம் என்று கருதுகிறது இலங்கை. ஆனால், அது சாத்தியமற்றது என்று கடந்த வாரம் சரத் பொன்சேகா கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

-சுபத்திரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

423

## அம்புலிமாமா கதைகள்

# இரு போக்கிரிகள்



ஒரு நாட்டில் இரு போக்கிரிகள் இருந்தனர். அவர்கள் சாது வேடம் போட்டுக்கொண்டு ஊரையே மாற்றிப் பிழைப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தனர்.

எந்த ஊரிலும் அவர் கள் சில மணி நேரங்களுக்கு மேல் தங்குவதில்லை. தங்கும் நேரத் திற்குள் அந்த ஊரில் யாரையாவது ஏமாற்றி பணம் பறித்துக்கொண்டு அடுத்த ஊருக்கு ஓடிவிடுவார்கள். இப்படியாக அவர்களது பிரயாணமும் மோசடியும் அவர்களது நாட்டில் மட்டுமல்ல பலநாடுகளுக்கும் செல்லலாயினர்.

இருவரில் ஒருவன் குருவாகவும் மற்றையவன் சீடனாகவும் நடித்து வரலானார்கள். ஒருதடவை அவர்கள் வேறொரு கிராமத்தில் செய்தமோசடி ஒரு கிராமத்திற்குச் சென்றபோது அவ்வூராருக்குத் தெரிந்துவிட்டது. உடனே எல்லோரும் ஒன்றுசேர்ந்து கொண்டு இரண்டு சாதுக்களுக்கும் குண்டாந்தடிகளால் முதுகும் உடம்பும் வீங்கும்படி உபசாரம் செய்தனர்.


குண்டாந்தடிகள் போட்ட போட்டில் குருவும் சிஷ்யனும் ஆளுக்கொரு பக்கமாக ஓடிப் போயினர். தப்பினால் போதும் என இருவரும் தத்தம் வழியே எங்கும் நிற்காது ஓடிக்கொண்டேயிருந்தனர். குருவேடக்காரன் ஓடியோடி ஒரு பெரிய நகரத்தை அடைந்தான்.

அவ்வூர் சத்திரத்தை அடைந்து அங்கு ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டு தியானம் செய்வது போலக் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் மக்கள் அங்கு கூடிவிட்டனர். யாரோ ஒரு பெரிய யோகி என்று கூறினர். சிலர் விழுந்து வணங்கினார்கள்.

அப்போது அவன் மெதுவாக கண்ணைத் திறந்தான். தனது கைகளைத் தூக்கி எல்லோரையும் ஆசீர்வதிப்பதுபோல சைகை செய்தான். பின்பு பக்தகோடிகளே பல நாட்கள் உபாசனையின் பேரில் தேவிபூஜை செய்து பல தாயத்துக்களை தயாரித்திருக்கிறேன். அதை நீங்கள் வாங்கிக் கட்டிக்கொண்டால் உங்களை பிடித்துள்ள பீடைகளெல்லாம் ஒழியும்.

அர்ச்சனை குங்குமத்தை வாங்கி இட்டுக்கொண்டால் துஷ்ட கிரகங்களின் செய்கைகள் தூரப்போகும் என கூறினான். சிலர் குங்குமத்தை வாங்கிக் கொண்டனர். வேறு சிலரோ தாயத்தை வாங்கிக் கொண்டனர். இன்னும் சிலரோ அவனுக்கு பாத காணிக்கையாக பணம் சமர்ப்பித்தனர்.



அவனும் உடனே இந்தப் பணத்தால் ஹரித்துவாரத்தில் ஒரு மடம் கட்டப்போகிறேன் என்று கூறவே மேலும் பணம் சேரலாயிற்று.


இந்தச் சமயத்தில் அவனை விட்டுப் பிரிந்த சீடன் அந்த ஊருக்கு வந்து சேர்ந்தான். அவனும் அந்த சத்திரத்தை அடைந்ததும் குருவேடதாரியைப் பார்த்தான். உடனே உரத்த குரலில் இந்த ஊரிலும் உன் வேலைத்தனத்தை ஆரம்பித்து விட்டாயா? கபட சந்நியாசி ருத்திராட்ச பூனையே ஓடிவிடு இங்கிருந்து. மகா ஜனங்களே இவன் வார்த்தையை நம்பாதீர்கள். அவ்வளவும் பொய். மோசம் போகதீர்கள் என்று எச்சரிக்கலானான்.

ஒரு சிலர் அதையும் நம்பி ஆஹா! அப்படியா சமாசாரம் என்றனர். கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டதைக் கண்டு குரு யாரோ வழியில் போகிற பேர்வழி உளறிவிட்டதற்காக உங்களுடைய நம்பிக்கையை இழக்கக்கூடாது. பாவம் அவன் அஞ்ஞானத்தால் ஏதோ உளறுகிறான்! பொறுத்துப் போகிறேன் நான் என்றான்.

அப்போது அந்தச் சீடன் ஆஹா! என்ன பேச்சு! கையாலாகதவனுக்கு வாய்ப் பேச்சாவது இருக்கிறதே என்று எள்ளி நகையாடினான். அதைக் கண்ட குரு கோபம் கொண்டு ஏய் வீணாக எனக்குக் கோபமூட்டாதே! அப்புறம் விபரீதம் விளையும் என்று கூறினான்.

சீடனோ அதைச்சற்றும் பொருட்படுத்தாமல் எத்தனை நாட்கள்தான் உங்களைப் போன்ற சாமியார்கள் ஊரை ஏமாற்றுவீர்கள்? என்னிடம் உங்கள் நாடகம் பலிக்காது.

நீங்கள் உண்மையிலேயே சாமியார் இல்லை. உங்களுக்கு எந்தச் சக்தியும் கிடையாது. நீங்கள் ஊரை ஏமாற்றுகிறீர்கள் என்று கூச்சலிட்டான்.



உடனே குரு ஏய் துர்ஆத்மா இதோ அனுபவி உன்னுடைய சேட்டையின் பலனை என்று கூறித் தன்னுடைய கமண்டலத்தில் உள்ள நீரை எடுத்து அவன் மீது தெளித்தான்.

என்ன ஆச்சரியம்! அந்தச்சீடன் துடித்துத் துடிக்குக் கீழே விழுந்தான். கையும் காலையும் ஆட்டிக் கொண்டு அவஸ்தைப்படலானான்.

பின்பு மெதுவாக ஊர்ந்து வந்து குருவேடதாரியின் காலில் விழுந்து மகாத்மா என்னை மன்னியுங்கள். உங்கள் மகிமை அறியாது வாய்க்கு வந்தபடி பேசிவிட்டேன் என்றான்.

கூட்டத்தினர் இதைக் கண் கொட்டாது பார்த்துக் கொண்டேயிருந்தனர். ஒருசிலர் சுவாமி அவனை மன்னித்துப் பிழைத்துப் போகவிடுங்கள் என்று வேண்டினர்.

அப்போது குரு கோபத்தைத் தணித்துக்கொண்டு போ, இனி இந்த மாதிரி சாதுக்களை அவமரியாதையாகவும் துச்சமாகவும் பேசாதே! எனக்கூறி மீண்டும் கமண்டலத்தில் இருந்த நீரை எடுத்துத் தெளித்தான்.

சீடனும் சட்டென எழுந்து நின்றான். பின்பு குருவுக்கு வணக்கம் செலுத்திவிட்டு எங்கோ போய் விட்டான்.

குருவின் தாயத்திற்கும் குங்குமத்திற்கும் அந்த ஊரில் ஒரே கிராக்கி. நல்ல காணிக்கையும் கிடைத்தது. சற்று நேரத்திற்குள் கிடைத்த பணத்துடன் அவ்வூரை விட்டே புறப்பட்டான்.

அந்த ஊரைத்தாண்டி சற்றுத் தூரம் சென்றதுமே சீடன் அவன் முன் வந்து எப்படி நாம் செய்த வேலை என்று கேட்டான். அதற்கு குருவும் ஆமாம், நீயும் என் கோபத்தால் அவஸ்தைப் பட்டவன் போல நடித்ததால்தான் இவ்வளவு பணமும் கிடைத்தது. இந்தா உன் பங்கு பாதிப்பை எனக்கூறி கிடைத்த பணத்தில் பாதியை அவனிடம் கொடுத்துவிட்டான்.

குருவும் சீடனும் வேறொரு ஊருக்கு தமது வேலைத்தனத்தை காட்டச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகளை வழங்கும் விஜய வருட பலன்கள்

ஜோதிடக் கலைமணி, சிவல்புரி சிங்காரம்

**உத்ரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

### குருவை வழிபட்டால் குழப்பங்கள் தீரும்! கடமையிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும் கன்னி இராசி நேயர்களே!

"விஜய" ஆண்டின் தொடக்கத்தில் வியாழன் உங்கள் இராசியைப் பார்க்கிறார். வைகாசி மாதத்திற்குமேல் 10 ஆம் இடத்திற்கு செல்கிறார். இராசி நாதன் புதன் நீச்சம் பெற்றிருக்கிறார். எல்லாவற்றிற்கும்மேலாக லாபாதிபதி சந்திரன் உச்சம்பெற்று வருகிற புத்தாண்டை வளப்படுத்தப் போகிறார். எனவே, லாபம் வருவதில் தடை ஏற்படாது. ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் அதை தக்கவைத்துக் கொள்ள அதிக பிரயாசை எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

ஏழரைச்சனி நடைபெறுகிறதே என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம். வாழ்வில் பல மாற்றங்களை தருவது சனிதான். அந்த அடிப்படையில் உங்கள் சுய ஜாதகத்தைப் பார்த்து எத்தனையாவது சுற்று என்பதை அறிந்து கொள்ளுங்கள. மூன்றாவது சுற்று நடப்பவர்கள் முக்கியமாக சிறப்பு பரிகாரங்களை மேற்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் ஆரோக்கிய பாதிப்பிலிருந்து அகல இயலும். குருப்பெயர்ச்சிக்கு பின்னர் கூடுதல் கவனத்தோடு செயற்படுவது நல்லது.

**தோற்றத்தை வைத்து எடைபோட முடியாதவர்கள்!**

மற்றவர்களுக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சி காண்பவர்கள் நீங்கள். யாரையும் ஏமாற்ற மாட்டீர்கள். ஆனால், ஏமாற்றத்தை நீங்கள் சந்திப்பீர்கள். பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி என்ற வைரவரிகள் உங்களுக்கு பொருந்தும். தோற்றத்தை வைத்து உங்களை எடைபோட முடியாது. எத்தகைய சூழ்நிலையிலும் கொடுத்த வாக்கை மீற மாட்டீர்கள். உடன்பிறப்புகளுக்கு நீங்கள் உதவிகளைச் செய்வீர்கள். ஆனால், அவர்கள் நீங்கள் எதிர்பார்த்தபடி நடந்து கொள்வார்களா? என்பது சந்தேகம்தான்.

**நந்தன வருடம் பங்குனி மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 11.52 மணிக்கு தனுசு லக்னம், கார்த்திகை நட்சத்திரம் ரிஷப இராசியில் அமிர்த யோகத்தில், விஜய வருடம் பிறக்கிறது.**

பெண்ணுக்கு பெண்ணே எதிரி என்பதுபோல கன்னிக்கு கன்னியே எதிரியாக இருப்பர். எனவே, இரண்டு கன்னி இராசிக்காரர்களோ, இரண்டு சிம்ம இராசிக்காரர்களோ, இரண்டு கடக இராசிக்காரர்களோ ஒரே குடும்பத்தில் பிறந்து இருந்தால் ஒருவரது முன்னேற்றம் மற்றொருவரால் பாதிக்கப்படலாம். எனவே, அதற்குரிய பரிகாரங்களை முறையாக யோகபலம்

## குருவின் வழிபாட்டால் குழப்பங்கள் தீரும்!

பெற்ற நாளில் செய்துகொள்வது நல்லது.

உங்கள் சுய ஜாதகத்தில் யோகம் தரும் கிரகம் எது என்பதையறிந்து நவாம்சத்தில் அது இருக்கும் நிலையும் பாதசார பலமும் அறிந்து அதற்குரிய சிறப்பு ஸ்தலமும் தேர்ந்தெடுத்து வாய்ப்பிருக்கும் பொழுதெல்லாம் வழிபாட்டால் வளர்ச்சிமீது வளர்ச்சி கூடும்.

**விஜய ஆண்டின் தொடக்கம் வியக்கும் செய்தி கிடைக்கும்!**

நவக்கிரகங்கள் உலாவரும் நிலையைப் பொறுத்தே நமக்கு நன்மைகள் கிடைக்கின்றன. விஜய ஆண்டின் தொடக்கத்தில் இராசிக்கு 8 இல் நான்கு கிரகங்கள் வலுப்பெற்றிருக்கிறார்கள்.

2 ஆம் இடத்து ராகுவால் எண்ணற்ற லாபம் கிடைத்தாலும் அனைத்து தொகையையும் அடுத்த நிமிடமே செலவழிக்க வைக்கும் விதத்தில் அல்லவா அஷ்டமத்தில் கிரகங்கள் வலுவடைந்திருக்கின்றன என்று நீங்கள் நினைக்கலாம்.

என்ன இருந்தாலும் குருவின் பார்வைக்கு கொஞ்சம் கூடுதலாகவே பலன் கிடைக்கும். எனவே, குருவின்



பார்வை உங்கள் இராசியின் மீது பதிவதால் மலைபோல் வந்த துன்பம் பனிபோல் விலகும். மனித சக்திக்கு அப்பாற்பட்ட மகத்தான சக்தியாக குருவின் பார்வைபலம் கொடுக்கும்.

பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்கபலமாக இருக்கும் நண்பர்களில் கருத்து வேறுபாடுகளும் ஏற்படலாம். விலையுயர்ந்த பொருட்கள் மற்றும் வாகனங்களின் வாயிலாக கவலைக்குரிய சம்பவங்கள் நடைபெறலாம்.

குடும்பத்தில் சுபகாரியப்பேச்சுக்கள் கைகூடிவரும். பெண்குழந்தைகளின் சடங்கு நிகழ்ச்சிகள், பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் ஆகியவை நிகழும் ஆண்டாகக்கூட இந்த ஆண்டைக் கருதலாம்.

வீடு மாற்றம், இடமாற்றம் செய்ய விரும்புபவர்கள் சுய ஜாதகத்தையும் ஒருமுறை புரட்டிப் பார்த்துக்கொள்வது நல்லது. மாமன், மைத்துனர் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும். என்ன இருந்தாலும் சர்ப்ப சாந்தியை முறையாகச் செய்து கொண்டால்தான் இழப்புகளைச் சந்திக்காமல் இருக்க இயலும்.

**10 இல் வரும் குருவால் பதவி மாற்றம் ஏற்படுமா?**

இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் வைகாசி மாதம் 14 ஆம் திகதி 28.05.2013 அன்று மிருகசீருட நட்சத்திரம் 3 ஆம் பாதத்தில் மிதுன ராசியில் சஞ்சரிக்கப்போகிறார். அதன் பார்வை பலம் உங்கள் இராசிக்கு 2,4,6 ஆகிய இடங்களில் பதிகிறது. இதனால் நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வந்து சேரப் போகின்றன.

10 இல் வரும் குருவால் ஜீவன ஸ்தானம் பலப்படுகிறது. எனவே, தொழில் மாற்றம், இடமாற்றம் உருவாகலாம். [illegible] இலாகா மாற்றம், அதிகாரிகளின் அனுசரிப்பின்மை, நீண்டதூரத்திற்கான மாற்றங்கள் உருவாகும். சுய ஜாதகத்தில் தெசாபுத்தி பலம் இழந்தவர்களுக்கு திருப்தியற்ற சூழ்நிலை உருவாகலாம்.

குருவின் பார்வை பலத்தால் பிறர் போற்றும் அளவிற்கு நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள். கடந்த ஓராண்டாக நடைபெற்ற பஞ்சாயத்துக்களில் கட்டுப்படாத சகோதரர்கள் இப்பொழுது கட்டுப்படுவர். அரசியல் வாழ்வில் இருப்பவர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க பதவிகள் கிடைக்கும்.

குருவின் பார்வை 4 ஆம் இடத்தைப் புனிதப்படுத்துவதால் தாயின் உடல்நலம் சீராகும். தக்கவிதத்தில் வாகன வசதிகள் வந்து சேரும். மனை கட்டிக் குடியேறும் யோகம் ஒருசிலருக்கு கிடைக்கும்.

குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். உடன் இருந்து பகையுடன் காட்சியளித்தவர்கள் உங்களை விட்டு விலகுவர். கடன் சுமை பாதிக்கு மேல் விலகும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

திசை மாறிய தென்முகக் கடவுள் இருக்கும் ஆலயங்களுக்குச் சென்று நீங்கள் அடியெடுத்து வைத்தால் விஜய வருடம் உங்களுக்கு வியக்கும் செய்திகளை வரவழைத்துக் கொடுக்கும். அது மட்டுமல்ல சனிக்கிழமை தோறும் அனுமனையும் வழிபட்டால் ஆனந்தம் பெருகும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ரச் சனியின் ஆதிக்க காலம்!**

சனி 2 ஆம் இடத்தில் உச்சம் பெற்று வருடத் தொடக்கத்திலேயே வக்ரம்

## கன்னி



பெறுகிறார். 14.04.2013 முதல் 04.07.2013 வரையிலும் மீண்டும் 01.03.2014 முதல் 13.04.2014 வரை சனி வக்ரம் பெறுகிறார். இதற்கிடையில் ஏப்ரல், மே, ஆகஸ்ட், செப்ரம்பர், ஒக்டோபர் ஆகிய மாதங்களில் சனி, செவ்வாய் பார்வை காலமும் ஏற்படுகிறது. இது போன்ற காலங்களில் கொஞ்சம் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை.

சனி உங்கள் இராசிக்கு 5,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியாகிறார். புத்திர ஸ்தானம் மற்றும் எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றிற்கு அதிபதியான சனி வக்ரம் பெறும்பொழுது, பிள்ளைகளால் பிரச்சினைகள் தோன்றி மறையும்.

பூர்வீக சொத்துக்களில் இருந்த பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு [illegible]க்கு கிடைத்த சொத்தை விற்று விட்டுப் புதிய சொத்தை வாங்கும் முயற்சியில் ஆர்வம்காட்டுவீர்கள். அதேசமயம் 6-க்கு அதிபதி வக்ரம் பெறுவதால் உத்தியோகம், ஊதிய உயர்வு கிடைக்கும். எதிரிகளின் பலம் குறையும்.

செவ்வாய்- சனியின் பார்வைக் காலத்தில் மட்டும் உடல் ஆரோக்கியத்திற்கென்று ஒரு தொகையைச் செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும். நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை.

**குருவின் வக்ர காலமும் செவ்வாயின் வக்ர காலமும்!**

13.11.2013 முதல் 12.03.2014 வரை குரு மிதுனத்தில் வக்ரம் பெறுகிறார். 4,7 க்கு அதிபதியான குரு வக்ரம் பெறுவது நன்மைதான். உங்கள் சுய ஜாதகத்தில் குரு வக்ரமாக இருக்குமானால் மிகுந்த நற்பலன்களை வழங்கும். சோர்வு அகன்று துணியும் தன்னம்பிக்கையும் கூடும். தூரதேசப் பயணங்களில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பப் பிரச்சினைகள் அகலும்.

நண்பர்கள் நல்ல சமயத்தில் கைகொடுத்து உதவுவர். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். வீடு கட்டுவது, வாகனம் வாங்குவது போன்றவைகள் நினைத்தவுடன் நிறைவேறுவதற்கான வழி பிறக்கும். வாழ்க்கைத் துணையால் வந்த துயரங்கள் அகலும். அவர்களால் வருமானங்களும் வந்து சேரும்.

சேர்க்கை சேர்வதில் நல்லவர் யார்? கெட்டவர் யார்? என்பதை இனம் கண்டு கொள்வீர்கள். வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்ட தென்முகக் கடவுளை இன்முகத்தோடு வழிபாடு செய்யுங்கள்.

**பலன் தரும் பரிகாரம்!**

**புதன்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ராம ஜெயம் எழுதுவதன் மூலம் நன்மையை வரவழைத்துக் கொள்ளலாம். நாமக்கல் விஸ்வரூப ஆஞ்சநேயரை வழிபட்டு நன்மைகளை நிரந்தரமாக வரவழைத்துக்கொள்ளுங்கள்**

செவ்வாயின் வக்ர காலம் உங்களுக்கு நன்மை தரும் விதத்தில் அமைகிறது. 3,8 க்கு அதிபதியான செவ்வாய் வக்ரம்பெறுவது யோகம்தான். சகோதர வழியில் நன்மை கிடைக்கும். விலகி சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். இக்காலத்தில் குரு மற்றும் செவ்வாய்க்குரிய சிறப்பு ஸ்தலங்களை தேர்ந்தெடுத்து வழிபடுவது நல்லது.

**கன்னி இராசியில் பிறந்த பெண்களுக்கு கனவுகள் நனவாகும். இந்த விஜய வருடத்தில் ஏழரைச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதையும் யோசித்து செய்வதே நல்லது. மனநிம்மதி குறையும். குடும்ப சுமை கூடும். பெரியவர்களை கலந்து ஆலோசித்து செய்தால் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும்.**

**கணவன்- மனைவியரிடையே கனிவு கூடும். ஒற்றுமை பலப்படும். தாய் வழியில் வரவேண்டிய சொத்துக்கள் தானாகவே வந்து சேரும். விலகி இருந்த சொந்தங்கள் எல்லாம் இனி மகிழ்ச்சியோடு வந்திணைவர். சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கத்தில் உங்கள் இராசி இருப்பதால் யோக பலம் பெற்ற நாளில் முறையாக சர்ப்ப சாந்தியை செய்து கொண்டால் முன்னேற்றத்தில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும்.**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா மீது போர்க்குற்ற அறிக்கை தயாரிக்க ஆயத்தமாகிறது அரசாங்கம்

(கொழும்பு)

இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில் அவர்களால் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களை பட்டியலிட்டு வெளியிடும் முயற்சியில் இலங்கை சனத் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக அதன் தலைவர் ஏ.சி. குணரட்ன தெரிவித்துள்ளார்.

நம்பகமான சுதந்திரமான போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ள அழுத்தம் கொடுக்கும் இந்தியா மற்றும் மேற்கு நாடுகளின் வாயை அடைக்கும் முயற்சியே இது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி இந்தியப் படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் பற்றிய விபரங்களை திரட்ட சனத் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் முன் ஆயத்தங்களில் ஈடுபட்டு வருகின்றது.

முதற்கட்டமாக இரண்டாவது ஜே.வி.பி. கிளர்ச்சி இடம்பெற்ற காலப் பகுதியில் கொல்லப்பட்டவர்கள் , காயமடைந்தவர்கள், சொத்து இழப்புகள் குறித்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இத் திட்டம் ஆறு மாதங்களுக்குள் நிறைவடையும் என்றும் அடுத்த மாதம் இந்தக் கணக்கெடுப்பு ஆரம்பிக்கும். குறிப்பாக 1980 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கையில் இந்தியத் தலையீட்டுக்குப் பின்னர் கொல்லப்பட்டவர்களின் விபரங்களை வெளிப்படுத்துவது இந்தக் கணக்கெடுப்பின் நோக்கமாகும்.

இலங்கையில்இறுதிக்கட்டப்போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து நம்பகமான, சுதந்திரமான விசாரணைகளை நடத்த வேண்டும் என்று இந்தியா வலியுறுத்த ஆரம்பித்துள்ள நிலையிலேயே இலங்கை இந்தக் கணக்கெடுப்பை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.

இந்தியப் படையினரால் பெருமளவு தமிழர்கள் கொல்லப்பட்ட நிலையில் அதனை வைத்து இந்தியா தன் மீது கொடுக்கும் போர்க்குற்ற விசாரணை அழுத்தங்களை குறைக்க இலங்கை முற்படுவதாக கருதப்படுகின்றது. (அ-2)

# மக்களின் காயமாக அரசு மாறியுள்ளது

*ரணில் தெரிவிப்பு*

(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஆட்சி நடத்தும் இந்த அரசாங்கம் மக்களின் காயமாக மாற்றமடைந்துள் ளது என எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் சகல துறைகளிலும் ஊழல் மோசடி இடம்பெற்று வருகின்றன. மக்கள் வாழ முடியாத ஓர் சூழ்நிலை உருவாகியுள்ளது.

மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும்.

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவினால் வழங்கப்பட்ட அறிக்கைப் பரிந்துரைகளை ஏன் அமுல்படுத்த முடியாது என இந்தியா உள்ளிட்ட நாடுகள் கேள்வி எழுப்புகின்றன என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பரிந்துரைகளின்படி இலங்கை அகதிகள் மீளவும் அழைக்கப்படுவர்

*அரசாங்கம் தெரிவிப்பு*

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை மீளவும் நாட்டுக்கு அழைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன்பிரகாரம் நாடு திரும்பும் இலங்கை அகதிகளுக்கு இலவச கடவுச்சீட்டுக்களும் பிறப்புச் சான்றிதழ்களும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அடுத்து இரண்டாண்டு காலப் பகுதியில் சகல இலங்கை அகதிகளையும் மீள அழைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் இணக்கம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு முதல் இது வரையில் 5 ஆயிரத்து 304 இலங்கை அகதிகள் நாடு திரும்பியுள்ளனர். தென்னிந்தியாவில் தற்போது 68 ஆயிரம் இலங்கை அகதிகள் முகாம்களிலும் வேறு இடங்களிலும் தங்கியுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் இரண்டாண்டுக்குள் மீள அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கை அகதிகளை மீள அழைத்துக்கொள்வது தொடர்பில் ஓர் பொறிமுறைமையை உருவாக்க வேண்டுமென கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (அ-2)

# பாதுகாப்பு கோருகிறார் பாகிஸ்தான் பெண்

பாகிஸ்தான் இராணுவத்துக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்த குற்றச்சாட்டின் கீழ் பாகிஸ்தான் அரசாங்கத்தினால் தேடப்பட்டு வருகின்ற பாகிஸ்தானிய பெண் இணையபதிவாளர் ஒருவர் இலங்கையில் பாதுகாப்பு கோரியுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமது பிளக்கரில் பாகிஸ்தான் இராணுவம் தொடர்பிலான குற்றச்சாட்டுகளை பதிவு செய்தமைக்காக அவர் பாகிஸ்தாதானில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த மாதம் இலங்கை வந்தபோது, விமான நிலையத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தற்போது தடுப்பில் இருக்கும் தன்னை நாடு கடத்தாமல் தமது பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அவர் இலங்கை ஜனாதிபதியிடமும் பிரதம நீதியரசரிடமும் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# த.பே.உரிமையாளர்கள் பணிப்புறக்கணிப்பு

இலங்கையின் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் நாடு தழுவிய சேவைப் புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை நடத்த தயாராகியுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிக்குள் தமது போராட்டம் நடத்தப்படத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் குறிப்பான திகதியை அவர் அறிவிக்கவில்லை.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் நடத்தப்படவிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.




★ *1241*-மங்கோலியப் படைகள் போலந்து மற்றும் ஜேர்மனியப் படைகளைத் தாக்கி தோற்கடித்தனர்.

★ *1413*-ஐந்தாம் ஹென்றி இங்கிலாந்து மன்னனாக முடிசூடினான்.

★ *1865*-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ரொபேர்ட் லீ தனது 26 ஆயிரத்து 765 பேருடனான படைகளுடன் வேர்ஜீனியாவில் சரணடைந்ததில் உள்நாட்டுப் போர் முடிபுக்கு வந்தது.

★ *1940*-இரண்டாம் உலகப் போர்: நோர்வே மற்றும் டென்மார்க் மீது ஜேர்மனி தாக்குதலைத் தொடுத்தது.

★ *1948*-ஜெருசலேம் நகரில் டெயிர் யாசின் என்ற கிராமத்தில் 120 அரபு மக்கள் இஸ்ரேலியரால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ *1953*-வார்னர் பிறதர்ஸ் நிறுவனம் முதல் முப்பரிமாணத் திரைப்படமான ஹவுஸ் ஒவ் வக்ஸ் (House of wax) இனை வெளியிட்டது.

★ *1959*-மேர்க்குரித் திட்டம்: ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது விண்வெளி வீரர்கள் ஏழு பேரின் பெயர்களை நாசா அறிவித்தது.

★ *1967*-முதல் போயிங் 737 விண் ஓடம் விண்ணில் செலுத்தப்பட்டது.

★ *1984*-யாழ்ப்பாணம் அடைக்கல மாதா தேவாலயம் இராணுவத்தினரின் ரொக்கட் தாக்குதலுக்கு உள்ளானது.

★ *1991*-ஜோர்ஜியா சோவியத் .ஒன்றியத்திலிருந்து விடுதலையை அறிவித்தது.

★ *1992*-முன்னாள் பனாமா ஜனாதிபதி மனுவேல் நொரியேகாவுக்கு ஐக்கிய அமெரிக்காவின் சமஷ்டி நீதிமன்றம் 30 ஆண்டுகால சிறைத்தண்டனை அளித்தது.

★ *1999*-நைஜர் ஜனாதிபதி இப்ராகிம் மைனசாரா படுகொலை செய்யப்பட்டார்.

★ **2003-ஈராக்கை முழுவதுமாக அமெரிக்கக் கூட்டுப்படையினர் கைப்பற்றினர். சதாமின் 24 ஆண்டு கால ஆட்சி முடிபுக்கு வந்தது.**

**இறப்புக்கள்**

★ *1626*-சேர் பிரான்சிஸ் பேகன், ஆங்கில தத்துவவாதி *(பி.1561)*

★ *1959*-பிராங்க் லாய்டு ரைட், அமெரிக்கக் கட்டடக் கலைஞர் *(பி.1867)*

**சதாம் உசைன்**



சதாம் உசைன் அப்த் அல்– மஜித் அல் –திக்ரித் 1937 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி பிறந்தார். முன்னாள் ஈராக் நாட்டின் ஜனாதிபதியாவார். இவர் ஜூலை 16 ஆம் திகதி 1979 இல் இருந்து ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி 2003 ஆம் ஆண்டு வரை அமெரிக்கா தலைமையிலான ஈராக் படையெடுப்பு வரையில் இவர் அந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார்.

அரசுக்கும் ஆயுதப் படைகளுக்கும் இடையேயான பிரச்சினைகளை கடுமையாக அடக்கி ஆண்டு அரசு இயந்திரத்தின் மீதான தன் கட்டுப்பாட்டை வலுவாக்கிக் கொண்டார். இவரது காலத்தில் ஈராக் மக்களின் வாழ்க்கைத் தரம் குறைந்ததோடு அவர்களின் மனித உரிமைகளுக்கும் பங்கம் ஏற்பட்டது. சதாமின் அரசு விடுதலை அல்லது தன்னாட்சியை வலியுறுத்திய இனம் அல்லது சமயம் சார் இயக்கங்களை மட்டுப்படுத்தியது.

ஐக்கிய அமெரிக்க மாநிலங்கள் மற்றும் அதன் கூட்டாளிகள் இணைந்து மேற்கொண்ட 2003 ஈராக் போருக்கு பின்னர் சதாமின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. டிசெம்பர் 13 ஆம் திகதி 2003 ஆம் ஆண்டு அன்று திக்ரித்துக்கு வெளியே உள்ள பாதாள அறை ஒன்றில் ஒளிந்திருந்த சதாமை அமெரிக்கப் படையினர் கைது செய்தனர்.

தொடர்ந்து 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி இவருக்கு தூக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டு அம்மாதம் 30 ஆம் திகதி தூக்கிலிடப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்பைப் பிரச்சினைகளும் அவற்றுக்கான சிகிச்சை முறைகளும்


கருப்பையில் தோன்றும் பல்வேறு பாதிப்புக்களை புற நோயாளிகள் பிரிவிலேயே மருத்துவர்கள் சரி செய்து விடுகிறார்கள். சிலவற்றுக்கு மட்டுமே அறுவை சிகிச்சைகள் தேவைப்படுகின்றன.

**கருப்பை கட்டிகள்...**

கருப்பையில் தோன்றும் இந்த நார்த்திசுக் கழலைகள், கருப்பைக் குழாயானது கருப்பையோடு இணையும் இடம் வரையில் கருப்பைக் குழி முழுவதையும் அடைத்துக் கொண்டிருந்ததால் இவற்றுக்கு அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது. இவ்வாறல்லாது சிறிய அளவில் இருந்தால் இதனால் சிகிச்சை செய்யலாம். ஒரேநாளில் முற்று பெறக்கூடிய இந்த அறுவை சிகிச்சையின் போது தசைகளை பிரித்து வைப்பதற்காக தேவைப்பட்டால் பிளாஸ்டிக் காயில் ஒன்று பொருத்தி வைக்கப்படுகிறது. நுண்ணுயிர் எதிரி மாத்திரைகளும் அளிக்கப்படுகின்றன. சில வேளைகளில் ஈஸ்ட்ரோஜென் மற்றும் ஸ்ரொயிட்ஸ் மருந்துகளும் அளிக்கப்படுகின்றன. இந்த பிரச்சினை முற்றிலும் சரி செய்யப்பட்ட பிறகு கருத்தரிக்கும் வாய்ப்பு சிறப்பாக இருக்கும்.

**நீர்கழலைகள்...**

பாலிப்ஸ் என்கிற நீர்க்கழலைகள் கருப்பை




கருத்தரிப்பதில் எந்தவிதமான பாதிப்பு இருப்பதில்லை.

இக்கழலைகளுக்கு கருப்பையிலிருந்து இரத்த ஓட்டம் கிடைப்பதால் இவை ஏனைய உறுப்புகளை போலவே வளருகின்றன. இவ்வளர்ச்சி கருப்பையை பாதிக்கிற அளவில் இருந்தால் நுண்முறை சத்திரச்சிகிச்சை மூலம் பாதிப்பில்லாமல் அகற்றிவிட்டு, கருப்பையை சுத்தப்படுத்தலாம்.

**பிறவிக்குறைபாடுகள்...**

ஹைபோபிளாஸ்டிக் யூட்ரஸ் எனப்படும் மிகை வளர்ச்சியடைந்த கருப்பை, செப்டேட் யூட்ரஸ் எனப்படும் தடுக்கமைந்த கருப்பை, இரட்டைக் கருப்பை, ஒற்றைக் கூம்பு கருப்பை, மைகார்னுயேட் யூட்ரஸ் எனப்படும் கவர்க்கூம்புக் கருப்பை போன்ற பிறவிக்குறைகளால் கருப்பை பாதிக்கப்பட்டிருக்கும்போது அதை அறுவை சிகிச்சை மூலம் சரி செய்ய முடியும்.

**கருப்பை தசை ஒட்டிக்கொள்ளுதல்...**

கருப்பையின் சுவர்கள் ஒன்றோடு ஒன்று அழுத்தி ஒட்டிக் கொண்டிருந்தால் அதை தனித்தனியே பிரிப்பதற்கு ஹிஸ்டராகோப்பி மற்றும் சில சிறப்பு கருவிகளை பிறப்புறுப்பு வழியாக செலுத்தி அறுவையில் அதிகளவில் ஏற்படுகின்றன. இவற்றை கருப்பை திசுச்சுரண்டல் முறையான டி அண்ட் சி முறையில் சுத்தப்படுத்துகிறார்கள். இக்கழலைகளால் மலட்டுத்தன்மை ஏற்பட்டிருந்தால் முற்றிலும் நீக்கப்படுகிறது.

**அடினோமையோசிஸ்...**

கருப்பை சுவரின் தசைகள் அளவுக்கு அதிகமாக வளர்வதால் இந்த பிரச்சினை ஏற்படுகிறது. இந்த நிலையை சீரமைப்பது சற்று கடினமானது என்றாலும் கருப்பை உள்வரிச்சவ்வுப்படல அழற்சிக்கு சிகிச்சை அளிப்பதுபோல இதற்கும் சிகிச்சை அளித்து சரிப்படுத்தலாம்.

**கருப்பை கழுத்து சுரப்பிய பிரச்சினைகளு...**

கருப்பைக் கழுத்துப் பகுதியில் சுரக்கும் சுரப்பிகளாலும் மலட்டுத்தன்மை உண்டாகிறது. இந்த சுரப்பியின் வழியாகத்தான் உயிரணுக்கள் கருப்பையினுள் நுழைகிறது என்பது உங்களுக்கு தெரியும். சில சமயம் இந்த சுரப்பி மிக கட்டியான சளியை போன்று மாறிவிடும் நிலையில் அதனுள் விந்தணுக்களால் நுழைய முடியாது போய்விடுகின்றன.

எவ்வாறாயினும் மேற்படி கருப்பை பிரச்சினைகள் உள்ளவர்கள் வைத்தியர் ஒருவரின் நேரடி ஆலோசனையை பெறுவதே சிறந்ததாகும்.

# காலை நேர உணவை தவிர்க்க கூடாது...



காலை நேரத்தில் உணவை தவிர்ப்பது ஆரோக்கிய கேட்டிற்கு வழிவகுக்கும் என்று உணவியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். குழந்தைகளுக்கு காலை உணவில் காபோவைதரேற்று சத்து நிறைந்த உணவுகளை அளிப்பது அவர்கள் நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடனும் செயற்பட, தேவையான சக்தியை அளிக்கிறது என்றும் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்றைய அவசர உலகத்தில் பெரும்பாலானவர்களுக்கு, காலை உணவை சாப்பிடக்கூட நேரமின்மையால் அதனை தவிர்த்து விடுகின்றனர். அதிலும் பாடசாலைக்குழந்தைகள் அநேகம் பேர் காலை உணவை உட்கொள்வதே இல்லை. பெரும்பாலும் வெறும் வயிறுடனே பாடசாலைக்குச் செல்கின்றனர். இதற்கு நேரமின்மையையே காரணமாக தெரிவிக்கின்றனர்.

இரவு சாப்பிட்ட பின் 6 முதல் 10 மணி நேரங்கள் வரை எதுவும் சாப்பிடாமல், நீண்ட இடைவெளிக்கு விடப்படுகிறது. எனவே உடலுக்கு தேவையான சக்திக்கு, காலையில் உணவு சாப்பிடுவது அவசியம் என்கின்றனர் உணவியல் வல்லுநர்கள். காலையில் நாம் சாப்பிடும் உணவு தான், நாள் முழுவதும் சுறுசுறுப்பாகவும், புத்துணர்ச்சியுடனும் செயற்பட, மூளை மற்றும் தசைகளுக்கு தேவையான சக்தியை அளிக்கிறது.

காலை வேளையில் உணவை தவிர்க்காமல் சாப்பிடுவதால், இதயம், சமிபாட்டு தொகுதி மற்றும் எலும்பு ஆகியவையும் ஆரோக்கியமாக இருக்கும். காலை உணவில் நார்ச்சத்து நிறைந்த உணவுப் பொருட்கள் மற்றும் பருப்பு வகைகள் ஆகியவற்றை சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது, அது ஜீரண சக்தியை அதிகரிக்கும்.

காலை உணவை முறையாக உட்கொள்பவர்களுக்கு குருதி வெல்ல அளவு இயல்பாக இருப்பதால், இடையில், பசி தோன்றாது. காலையில் சாப்பிடும் போது அதிக கொழுப்பு நிறைந்த உணவுப் பொருளாக சாப்பிடாமல், சத்தான சரிவிகித உணவாக சாப்பிடுதல் நலம். அதிக கொழுப்பு நிறைந்த உணவாக சாப்பிடும் போது, அவை உடலின் ஆற்றலை அதிகரிப்பதற்கு பதி லாக, மந்த நிலையை உருவாக்கி விடும்.

எனவே ஆரோக்கியமான வாழ்வு, சுறுசுறுப்பான செயற்பாடு, உடல்நலம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, காலை உணவை தவிர்க்காமல், ஊட்டம் நிறைந்த உணவாக திட்டமிட்டு குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும் என்பது உணவியல் வல்லுநர்களின் அறிவுரையாகும்.

Health Care

## மருத்துவ உலகம்

உங்கள் நலம் உங்கள் கைகளில்

# இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள் - ஜெயலலிதா



இலங்கை சிறைகளில் உள்ள தமிழக மீனவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் மன்மோகன்சிங்குக்கு நேற்று கடிதம் அனுப்பியுள்ளார்.

அவர் அனுப்பிய கடிதத்தில் கூறியிருப்பவை வருமாறு,

இந்திய பெருங்கடல் பகுதியில் பாரம்பரியமாக மீன்பிடிக்கும் உரிமை பெற்று அங்கு தங்கள் வாழ்வாதாரத்துக்காக மீன்பிடி தொழில் செய்து வரும் அப்பாவி தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் மீண்டும், மீண்டும் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர்.

இலங்கை அரசால் இலங்கை தமிழர்கள் நடத்தப்படும் விதத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாட்டில் மக்கள் நடத்திவரும் போராட்டங்கள் தொடர்ந்து வரும் நிலையில், இலங்கை அரசு இப்போது எங்கள் மீனவர்களை கைது செய்து இலங்கை சிறையில் அடைத்துள்ளது.

இராமேஸ்வரத்தை சேர்ந்த 5 மீனவர்கள் கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக இலங்கை சிறையில் உள்ளனர்.

கச்சதீவை இலங்கைக்கு தாரைவார்க்கும் வகையில் தன்னிச்சையாக சர்வதேசகடல் எல்லை வரையறுக்கப்பட்டதை எதிர்த்து எனது தலைமையிலான தமிழக அரசு சுப்ரீம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறது.

மீனவர்களை இலங்கை இராணுவம் தொடர்ந்து சிறைபிடித்து செல்லும் நடவடிக்கை காரணமாக இரு நாடுகளிடையே பதற்றம் அதிகரிப்பதோடு மீனவ சமூகத்தினர் மத்தியிலும் அதிகப்படியான பதற்ற நிலை யை உருவாக்கும்.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதையும், துன்புறுத்தப்படுவதையும் இந்தியாவுக்கு எதிரான இலங்கையின் ஆட்சேபகரமான ஆக்கிரமிப்பு செயற்பாடு என்றே கருதுகிறேன்.

எனவே இலங்கை சிறைகளில் ஏற்கனவே உள்ள 24 மீனவர்களுடன், அங்குள்ள தமிழக மீனவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்காலத்தில் இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது அல்லது துன்புறுத்தப்படுவது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கும்படி இலங்கை அரசைவற்புறுத்த வேண்டும் என்று தங்களை கேட்டுக் கொள்கிறேன் என ஜெயலலிதா கடிதத்தில் கூறியுள்ளார். (அ-2)

# ஏமாந்து விடாதீர்!

## ஜனாதிபதி

தீய சக்திகளினால் பிரசாரம் செய்யப்பட்டு வரும் வதந்திகளைக்கேட்டு ஏமாந்து விடக் கூடாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்களிடம் கோரியுள்ளார். அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகை யில்,

இன, மத அடிப்படையில் பிளவு களை ஏற்படுத்தி குழப்பங்கள் விளை விப்பதனை தவிர்க்கவேண்டும். திட்டமிட்டுச்செயற் படுவதன் மூலம் சவால்களை வெற்றி கொள்ள முடியும். ஒன்றிணைந்து செயற்படுவது மிகவும் அவசியமானது. குறைந்த வருமானமுடைய மக்களுக்கு வீடுகள் வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)


# ஐ.தே.கட்சியின் மேதின கூட்டங்கள்

இம்முறை மேதினத்தை முன்னிட்டு ஐக்கிய தேசியக் கட்சி மூன்று இடங்களில் தங்களின் மேதின பேரணிகளை நடத்தவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதான பேரணி கொழும்பு- புறக்கோட்டையில் நடத்தப்படுவதோடு இந்த முறை தங்களுக்கு நான்கு தொழிற்சங்கங்கள் ஆதரவளித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். பதுளை, குருநாகல் மாவட்டங் களில் இரண்டுபேரணிகள் இடம் பெறவுள்ளன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா காணும் ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் முபாரக் மௌலவிக்கு சேவை நலன்பாராட்டு



2013 இல் பொன்விழாக் காணும் ஒஸ்மானியா கல்லூரியின் மீள் எழுச்சியை ஒரு முறை மனங் கொள்வோம்.

அவ்வாறு நினைவில் இருத்துகையில் அதிபர் முபாரக் கல்லூரிக்கு ஆற்றிய மிகப் பெரும் பணியை புரிந்து கொள்ளமுடியும்.

ஏ-9 பாதை திறந்து கிட்டத்தட்ட 25 குடும்பங்கள் முஸ்லிம் வட்டாரத்தில் மீளக் குடியேறியது. அப்போது 41 மாணவர்கள் அயல் பாடசாலைகளில் கல்வி கற்றார்கள். அதிபர் முபாரக்கின் முயற்சியால் ஒஸ்மானியாக் கல்லூரி 29.09.2003 இல் மீள ஆரம்பிக்கப் பட்டது.

தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை 41 மாணவர்கள் கல்வி கற்க ஆரம்பித்தார்கள். மூத்த கல்விமான்கள், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரின் ஆலோசனைகளுடனேயே இம் முயற்சிகள் தொடங்கப்பட்டன.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு சில வாரங்களின் பின்னர் தனியாக செயலாற்றிக் கொண்டிருந்த முபாரக்குடன் இரண்டு தொண்டர் ஆசிரியர்கள், உட்பட நான்கு ஆசிரியர்கள் இணைந்து கொண்டனர்.

இவ் ஆசிரியர் குழாத்தின் தொடர் முயற்சியால் ஒஸ்மானியாக் கல்லூரி மேலும் முன்னேற்றம் கண்டது.

2004 ஆம் ஆண்டில் 70 மாணவர்கள் மொத்தமாகக் கல்வி பயின்றனர். அந்த சொற்ப மாணவர்களின் மத்தியிலும் கூட அதிபர் முபாரக் வருடாந்த பாட சாலை இல்ல விளையாட்டுப் போட்டியை நடத்தி வந்தார். மேலும் 2004 இல் அஹ திய்யா (சன்மார்க்க போதனா பீடம்) ஆரம் பித்து வைக்கப்பட்டது. அதற்கும் அதிபராக முபாரக்கே பொறுப்பேற்றார்.

2005,2006 ஆம் ஆண்டில் மாணவர்தொகை 180 ஆக அதிகரித்தது.

இல்ல விளையாட்டுப் போட்டி, மீலாத் விழா, வருடாந்த பரிசளிப்பு விழா என்பன அதிபர் முபாரக்கின் முயற்சியால் நடைபெற்றது.

அடுத்து வந்த ஆண்டுகளில் மேலும் பல முன்னேற்றங்களை கொண்டு வந்த ஒஸ்மானியாக் கல்லூரி இன்று 465 மாணவர்களுடனும் 24 ஆசிரியர்களுடனும் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றது.

அதிபர் முபாரக்கின் அயராத பணி எம்மைப் பூரிப்படைய வைத்துள்ளது.

2013 ஆம் ஆண்டு ஒஸ்மானியாக் கல்லூரியின் பொன் விழா ஆண்டாகும். இது எம்மை மேலும் மகிழ்ச்சிக்குள்ளாக்குகிறது. பொன் விழாவினை வெகு விமர்சையாகக் கொண்டாடவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் கல்விமான்கள், முன்னாள் அதிபர்கள், முன்னாள் ஆசிரியர்கள், புழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரினதும் ஆலோசனைகளை வழங்கி உதவுக.

அல்ஹாக்-எம்.எவ்.எம். இக்பால்
தலைவர், முன்னாள் உ.த.
மாணவர் மன்றம்.

## சரத்தின் கோரிக்கையை ரணதுங்க நிராகரித்தார்

தமது கட்சியில் மீண்டும் இணை யுமாறு ஜனநாயக தேசிய முன்ன ணியின் தலைவர் சரத் பொன் சேகா விடுத்திருந்த கோரிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் அர் ஜுன ரணதுங்க நிராகரித்துள்ளார்.

சரத் பொன்சேகாவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அர்ஜுன ரணதுங்கவும், டிரான் அலசும் இந்த கட்சியில் இருந்து விலகி இருந்தனர்.

இந்நிலையில், கடந்த வாரம் செய்தியாளர்களிடம் பேசிய சரத் பொன்சேகா, ரணதுங்கவும், டிரான் அலசும் விரும்பினால் மீண்டும் தமது கட்சியில் இணைந்து கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

ஆனால் இந்த அழைப்பை நிராகரித்துள்ள ரணதுங்க, தாம் எடுத்த தீர்மானத்தில் உறுதியாக இருப்பதாக கூறியுள்ளார். (அ-2)

## கலிங்கத்தின் பரணி-4 இதழ் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ் எய்ட் நிறுவனத்தினால் வெளியிடப்படும் கலிங்கத்தின் பரணி-4 இதழ் வெளிவந்துள்ளது.

பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களிற்கான வெளியீடாக வெளிவந்திருக்கும் இவ் இருமாத இதழ் மறைக்கப்பட்ட போராளியின் வரலாறு தாத்ரி குட்டியும் ஸ்மார்த்த விவகாரமும், பல்கலைக்கழகக் கல்வி பகற்கனவா? என்ற சிறப்பு ஆக்கங்களுடன் கவிதை, கட்டுரை, சிறுகதை, அறிவியல் தகவல்கள் என்பனவற்றை தாங்கி வருகிறது.

கலிங்கம் என்ற இவ் இதழ் நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவும் முகமாக வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-5)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகபுரம் கிராமத்திற்கு குடிநீர் விநியோகம் திட்டம்

## அமைச்சர் தினேஷ் ஆரம்பித்து வைத்தார்

(யாழ்ப்பாணம்)

சமுதாய மட்ட நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் பச்சிலைப்பள்ளி விநாயகபுரம் கிராமத்திற்கு நேற்று முன்தினம் முதல் நீர் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் வடிகால் அமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த திட்ட நிகழ்வில் சந்திரகுமார் எம்.பி. கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

மீள்குடியேற்றத்தின் ஆரம்பத்தில் இவ் விநாயகபுரம் கிராமத்தில் எவ்வித அடிப்படை வசதிகளும் இருக்கவில்லை.

பலர் மீள்குடியேற முன்வரவுமில்லை. ஆனால், இங்கு மீள் குடியேறும் மக்களுக் கான அடிப்படைத் தேவைகள் விரைவாக நிவர்த்தி செய்யப்படும் என்ற வாக்குறுதியை நாம் அன்று மக்களுக்கு வழங்கியிருந்தோம்.

அதனடிப்படையில் தேவைகளும் படிப்ப டியாக நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

குறிப்பாக 40 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மலசலகூடங்களும் மக்களுக் கான வாழ்வாதார உதவிகளும் முன்பள்ளி யும் அமைக்கப்பட்டுள்ளன.

இதனிடையே நிரந்தர வீடுகளை பெற்றுக் கொள்ளாத மக்களுக்கும் வீடுகளை அமை த்துக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளன.

மேலும் இப்பகுதிக்கான பிரதான வீதி யினை புனரமைப்பதற்கான நிதியும் ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்து இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கும் மிக அடிப்படைத் தேவையான மின்சாரத் தினை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனிடையே இன்று இப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக எதிர்கொண்டு வந்த மிக முக்கிய பிரச்சினையான குடிநீர் பிரச்சினைக் கும் தீர்வு காணப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவின் வருகைக்கூடாக கிளிநொச்சி மாவட்டத்தின் பல பிரதேசங் களில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

அதாவது வட்டக்கச்சி அக்கராயன் பகுதிக ளில் சமுதாயமட்ட குடிநீர் விநியோகச் செயற். பாடுகளை துரிதப்படுத்துவதற்கும் மேலும் ஏழு பிரதேசங்களுக்கு குடிநீரை விநியோகிப்பதற் கான திட்டங்களும் நடைமுறைப்படுத்த அங் கீகரிக்கப்பட்டுள்ளது.

இவற்றோடு இரணைமடு நீர் விநியோகத் திட்டத்திற்கமைவாக கிளிநொச்சி மாவட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள நீர் விநியோகத்திட்டத்துடன் விநியோக மார்க்கத்தில் அமைந்துள்ள மேலும் பல பகுதிகளுக்கும் குடிநீரை விநி யோகிப்பதற்கான அங்கீகாரமும் கிடைத்துள் ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# கொழும்பு தமிழ் வர்த்தகரிடம் ஒரு கோடி ரூபா கொள்ளை

## முக்கிய நபர் கைது

(கொழும்பு)

கொழும்பு கொம்பனித்தெருவில் வைத்து தமிழ் வர்த்தகர் ஒருவரிடம் இருந்து கடந்த பெப்ரவரி மாதம் ஒரு கோடி ரூபாய் கொள்ளை யிடப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய வேளையில் அவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைதானார்.

இந் நிலையில் இவருடன் சேர்த்து இந்த சம்பவம் தொடர்பில் எட்டு பேர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

அவர்களில் மூன்று பேர் பொலிஸ் அதிகா ரிகள் என தெரிவிக்கப்படுகின்றது.

வங்கி ஒன்றில் இருந்து பணத்தை பெற்று வந்த வர்த்தகர் ஒருவரையும் அவரது உதவி யாளரையும் பொலிஸ் அதிகாரிகளின் உதவி யுடன் கடத்திச் சென்ற குழு ஒன்று அவர்க ளின் பணத்தையும் காரினையும் கைப்பற் றிக் கொண்டு கோட்டை பகுதியில் விட்டுச் சென்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ-2)

# மரண தண்டனை கைதிகள் 400 பேருக்கு ஆயுள் தண்டனை?

இலங்கை சிறைச்சாலைகளில் 400 மரண தண்டனை கைதிகளின் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றம் செய்யப்பட வுள்ளது.

மரண தண்டனைக் கைதிகளை அண் மையில் சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்தித்தபோது அவர்கள் எதிர்நோக்கி வரும் நெருக்கடிகள் குறித்து அறிந்து கொண்ட பின்னரே இத் தண்டனை மாற்றத் தீர்மானம் எடுக்கப்பட்டு சிறைச்சாலைகள் மற்றும் புனர் வாழ்வு அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

அதனடிப்படையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் வயதைக் கருத்திற் கொண்டு மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுமாறு சிறைச்சாலை கள் ஆணையாளர் சந்திரரட்ன பல்லேகம கோரியுள்ளார். (அ)

# யாழ்.வைத்தியசாலையில் தாதியர் பற்றாக்குறை


(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தாதியர்கள் பற் றாக்குறையுள்ளதாக யாழ்.போதனா வைத் தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.ஶ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.போதனா வைத்திய சாலையைப் பொறுத்தவரை ஆயிரத்து 500 தாதியர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், தற்போது 390 தாதியர்கள்தான் பணிபுரிந்து வருகின்றனர். இதனால் பாரிய நெருக்கடி நிலைமையினை யாழ்.போதனா வைத்திய சாலை எதிர்கொண்டு வருகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மட்டு மல்லாது நாடளாவிய ரீதியில் தாதியர் பற் றாக்குறை தற்போது நிலவி வருகின்றது.

தாதியர்கள் திருமணம் செய்து கொள்வ தற்காக (பெண்) வெளிநாடுகளுக்கு செல்வத னால் அதிகளவில் தாதியர் பற்றாக்குறை ஏற்பட்டு வருகின்றது எனவும் தெரிவித் தார். (அ-6)





*Ever Shine Kids World* முன்பள்ளியின் பேச்சுத்திறன்காண் வைபவம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் சிறார் ஒருவர் பரிசில் பெறுவதையும் படங்களில் காணலாம்.

# இராமேஸ்வரம் மீனவர்களின் வேலை நிறுத்தம் ஆரம்பம்

இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரை யற்ற வேலை நிறுத்தப் போராட்டமொன்றை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள் ளதாக அறிவித்துள்ளார்.

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச் சாட்டின் பேரில் இராமேஸ்வர மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் அண்மையில் கைது செய்திருந்தனர்.

இதனை கண்டித்தே இவர்கள் போராட் டத்தை ஆரம்பித்துள்ளதாகவும் தமது சகாக் கள் 30 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளதாகவும் மீனவர்கள் குற் றம் சுமத்தியுள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் 11 ஆம் திகதி பாரிய ளவிலான போராட்டமொன்றை நடத்த குறி த்த மீனவர்கள் தீர்மானித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ-2)

# மனிதப்புதைகுழி குறித்த அரசின் தீர்மானம் ஏற்புடையதல்ல

## ஜே.வி.பி. தெரிவிப்பு

மாத்தளை மனித புதைகுழி குறித்த அர சாங்கத்தின் தீர்மானம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என ஜே.வி.பி கட்சி அறிவித் துள்ளது.

மாத்தளை மனித புதைகுழி குறித்து விசா ரணை நடத்த ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவுள்ளதாகவும் இந்தத் தீர் மானம் குறித்து அரசாங்கம் வெட்கப்பட வேண்டுமெனவும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கால நேரத்தை விரயமாக்கும் நோக் கிலேயே அரசாங்கம் இவ்வாறு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நிறுவ முனைப்பு காட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஏப்ரல் 15 ஆம் திகதி வரை உஷ்ண நிலை அதிகரிப்பு

## நோய்களும் உருவாகும்

நாடெங்கிலும் நிலவும் வெப்பநிலை மக் களால் தாங்க முடியாத அளவுக்கு அதிகரித் திருக்கிறது.

ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதல் எதிர் வரும் 15 ஆம் திகதி வரை சூரியன் இலங் கைக்கு மேலாக நிலை கொண்டிருப்பதால் தான் உஷ்ணநிலை இவ்வாறு மோசமடைந் துள்ளது.

இதனால் வெப்பநிலையினால் சரும ரோகங்கள், வியர்க்குரு போன்றவற்றின் தாக்கம் அதிகரித்து உடம்பு முழுவதும் வியர் க்கும்போது எரிச்சலை ஏற்படுத்துகிறது.

இவ் வெப்பத்தின் தாக்கத்தை ஈடுகொடு க்க வேண்டுமாயின் மக்கள் கூடுதலான திரவ உணவை உண்ணுவதோடு சுத்தமான நீரை அதிகமாக பருகுவது, இளநீர், பழவகைகளை பிழிந்து குடித்தல் போன்றவை வெப்பத்தை சம நிலைப்படுத்துவதற்கு பேருதவியாக அமையுமென்று சமூக வைத்தியத்துறை யின் பேராசிரியர் ரோஹினி செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 14 ஆம்திகதியன்று சூரியன் வட பகுதிக்கு நகர்ந்து விடுமென்றும் வளி மண்டல ஆய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட வானிலை அவதானிப்பு அதிகாரி மெரில் மெண்டிஸ் தெரிவித்துள்ளார.

அத்துடன் இம் மாதத்தின் மூன்றாவது வாரத்தில் நுவரெலியாவுக்கு செல்பவர்களு க்கு நோய்கள் ஏற்படலாம்.

ஏப்ரல் விடுமுறைக் காலத்தில் மக்கள் தொகை அதிகரிக்கின்றது. நுவரெலியா நகரம் தூசியின் தாக்கத்தால் பாதிக்கப் படுவதனால் அங்கு செல்லும் உல்லாசப் பயணிகளுக்கு காய்ச்சல் தும்மல் போன்ற நோய்கள் பரவுவதற்கு ஏதுவாக இருக்கும்.

எனவே நுவரெலியாவுக்கு செல்பவர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமெ ன்று வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யும் நெறி தவறுதலும் ஒன்றையொன்று சார்ந்து இருக்கின்றன.

– பர்ட்ன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## புலனாய்வு முழுவதும் தமிழருக்கு எதிராகவா?

நகைச்சுவையில் நடிகர் விவேக் தனித்துவமானவர். மூடநம்பிக்கைகள் மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தத்ரூபமாக வெளிப்படுத்துவதில் அவருக்கு நிகர் அவர் என்றுதான் கூற வேண்டும்.

ஒரு திரைப்படத்தில் வந்த அவரின் நகைச்சுவையில் நமக்கு பிடித்தமான நகைச்சுவை இது.

திருமலை என்ற படத்தில் விவேக் நேர்முகத் தேர்வுக்காகச் செல்கின்றார்.

அந்த வீதியில் திருடன் ஒருவன் ஓடிச் செல்கிறான். அவனின் ஓட்டத்தால் வீதியில் தேங்கி நின்ற சேறு விவேக்கின் வெள்ளை நிற மேலாடையில் சிந்திவிட,

ஓடிச் சென்றவன் திருடன் என்று அறியாமல் அவனை எட்டிப் பிடித்து அவனுக்கு நாலு அறையும் கொடுத்து அவனின் மேலாடையை கழற்றி அணிந்து கொள்கிறார் விவேக்.

திருடனை தேடித் திரியும் பொலிஸார் மோப்ப நாயுடன் அந்த இடத்திற்கு வர, நாய் விவேக் மீது பாய்கிறது.

விவேக் பரிதாபகரமாக, ஐயா! நான் நேர்முகத் தேர்வுக்கு போகின்றவன். உங்கள் நாய் என்னைத் தப்பாக பிடித்து விட்டது என்கிறார்.

அதற்குப் பொலிஸாரோ எங்கள் நாய் ஒருபோதும் தப்பாகப் பிடிக்காது.

இதுவரை 97 கேசை இந்த நாய் பிடித்துள்ளது என்று பொலிஸார் கூற, அப்படியென்றால் இதுவரை நீங்கள் ஒரு கேசையும் பிடிக்கவில்லையா? என்று விவேக் பொலிஸாரை கேட்க அந்த இடத்தில் நகைச்சுவையின் தார்ப்பரியம் பளிச்சிடுகின்றது.

அட! இந்த நகைச்சுவை இந்த இடத்தில் எதற்கு என்று நீங்கள் கேட்கலாம். எல்லாம் காரணத்தோடுதான்.

வட பகுதியில் சமூக, கலாசார, குடும்பப் பிரச்சினைகள் எது நடந்தாலும் அது விடயத்தில் பொலிஸார் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

சமூக சீரழிவு நடக்கிறது; ஒரு வீட்டிற்குள் கொள்ளையர்கள் புகுந்துவிட்டார்கள்; அந்த விடுதியில் விபச்சாரம் நடக்கிறது; வீதி விபத்தில் ஆள் படுகாயம் இவ்வாறாக எதுபற்றி முறையீடு செய்தாலும் அதற்கான பொறுப்பை எடுப்பதில் மிகப் பெரிய அசமந்தம் பொலிஸாரிடம் இருப்பதை மறுக்க முடியாது.

இதுபற்றிக் கேட்டால் தகவல் தாருங்கள், தகவல் தந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாகப் பொலிஸ் பொறுப்பதிகாரிகளின் பதில் இருக்கிறது.

அப்படியானால் பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் பணி என்ன?

புலி இயக்கம் மீண்டும் தோன்றுமா? புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் என்ன செய்கிறார்கள்? அரசிற்கு எதிராக – பேரினவாதத்துக்கு மாறாக தமிழர்கள் யாரேனும் தலை தூக்குகிறார்களா? என்பன பற்றித்தான் அவர்கள் ஆராய்கிறார்களா?

ஆக, நாங்கள் தகவல் கொடுத்தால் அன்றி பொலிஸார் எந்தக் கேசையும் கண்டறியார் போலும்.

## நவீன வசதிகளுடனான அம்புலன்ஸ் வண்டிகள்



அதி நவீன வசதிகளுடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு புதிதாக 4 அம்புலன்ஸ் வண்டிகள் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

சுகாதார அமைச்சினால் தலா 8 மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 4 அம்புலன்ஸ் வண்டிகளும் கடந்த 6 ஆம் திகதி போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டதாகவும் தமது சேவையினை இன்று தொடக்கம் (நேற்று) ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சினால் புதிதாக வழங்கப்பட்ட இந்த நான்கு அம்புலன்ஸ் வண்டிகளுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் மொத்தமாக 12 அம்புலன்ஸ் வண்டிகள் உள்ளதாகவும் இன்னும் இரண்டு அம்புலன்ஸ் வண்டிகள் தேவைப்படுவதாகவும் தெரிவித்தார்.

இரண்டு அம்புலன்ஸ் வண்டிகளுக்கான கோரிக்கை சுகாதார அமைச்சிடம் விடப்பட்டுள்ளதாகவும் அடுத்த மாதமளவில் புதிதாக இரண்டு அம்புலன்ஸ் வண்டிகளை வழங்க சுகாதார அமைச்சு முன்வந்துள்ளதாகவும் பதில் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் யாழ். மாவட்டத்தில் வீதிகள் புனரமைத்து போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டுள்ள நிலையில் அதி நவீன வசதிகளுடன் நான்கு அம்புலன்ஸ் வண்டிகள் எமது வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளமை நோயாளர்களின் சிரமங்களை தவிர்க்க உதவும். கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு பின்பு தற்போதுதான் அம்புலன்ஸ் வண்டிகள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன. அதுவும் அதி நவீன வசதிகளுடன் வழங்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## தூத்துக்குடி-கொழும்பு கப்பல் சேவை விரைவில்

தூத்துக்குடி-கொழும்பு இடையே சிறிய ரக பயணிகள் கப்பல் இயக்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக்கழக தலைவர் நடராஜன் தகவல் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத்தின் சார்பில் நேற்று நடந்த வருடாந்த செய்தியாளர் சந்திப்பு நடந்தது. அப்போது நடராஜன் பேசுகையில்,

தூத்துக்குடி-கொழும்பு இடையே தொடங்கப்பட்ட பயணிகள் கப்பல் போக்குவரத்து போதிய வருமானம் இல்லாத காரணத்தினால் நிறுத்தப்பட்டது.

அதாவது ஆயிரம் பயணிகள் பயணிக்கும் வகையிலான தனியார் கப்பல் இயக்கப்பட்ட நிலையில் பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. இந்நிலையில் தூத்துக்குடி – கொழும்பு இடையே பயணிகள் கப்பலை இயக்குவது குறித்து கப்பற்றுறையிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இதில் 150 முதல் 250 எண்ணிக்கையிலான பயணிகள் செல்லும் வகையில் சிறியரக கப்பல்களை இயக்குவது குறித்து திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டிற்குள் இதற்கான அனுமதி பெறப்பட்டு தூத்துக்குடி-கொழும்பு இடையே மீண்டும் பயணிகள் கப்பல் இயக்கப்படும் என்றார் அவர்.(எ-11)

## மாற்று திறனாளிகள் இருவருக்கு வீட்டுத்திட்டம்

(கரணவாய்)

மாற்றுத் திறனாளிகளுக்கான இரண்டாம் கட்ட வீட்டுத்திட்டக் கொடுப்பனவு ஒருவருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் இரண்டு பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

இக் கொடுப்பனவானது ஈஸ்வரன் சதீஸ்கரன் (சமரபாகு சங்கரன் தோட்டம்), மாணிக்கம் தங்கவேல் (வீராட்சி வீதி உடுப்பிட்டி) ஆகியோருக்கே வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவை கரவெட்டி பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கரவெட்டி சமூக சேவை உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (அ-3-60)

## புதுவருடச் சந்தை வியாபாரம்

(பண்டத்தரிப்பு)

சங்கானை பிரதேச செயலக பிரிவு சமுர்த்தி வங்கி சங்கத்தினால் வருடா வருடம் நடத்தப்பட்டு வருகின்ற புதுவருட சந்தை வியாபாரம் நாளை புதன் கிழமையும் நாளை மறுதினம் வியாழக் கிழமையும் வட்டு. இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்சந்தையில் வலி.மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், தென்னை, பனை மரத்திலிருந்து பெறப்பட்ட பொருட்களை கொண்டு உருவாக்கப்பட்ட பொருட்கள், தைத்த ஆடைகள், மட்பாண்டத்தால் உருவாக்கப்பட்ட பொருட்கள், பால் உற்பத்திப் பொருட்கள், கடல் உணவுப் பொருட்கள், மருத்துவ மூலிகைகள் போன்றன விற்பனை செய்யப்படவுள்ளன. (அ-3-30)

## மாட்டுவண்டி சவாரி

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு பொன்னாலை அமரர் எஸ்.எஸ். சின்னையா ஞாபகார்த்தமாக மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பொன்னாலை கிருஷ்ணன் கோயிலுக்கு அருகாமையில் உள்ள மீான்பாய்ந்த திடலில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த காளைகள் பங்குபற்றவுள்ளன.

போட்டிக்கான கட்டுப்பணம் இலவசம். இப்போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-3)

## பாரம்பரிய விளையாட்டு

(தும்பளை)

பொலிகை மறவர் கலைக் குழுவினரால் போர்த்தேங்காய் அடிக்கும் நிகழ்வு எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் பொலிகண்டி கந்தவன தேவஸ்தான வீதியில் நடைபெறவுள்ளது.

தமிழர் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வான போர்த்தேங்காய் அடித்தல் பொலிகை சிலம்பாசான் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு போட்டியாளர்கள் ஐவர் கொண்ட குழுவாக பங்குபற்ற முடியும். ஒவ்வொரு குழுவும் 25 தேங்காய்கள் கொண்டு வருதல் வேண்டும்.

இப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் நாளை புதன்கிழமைக்கு முன்பு பதிவு செய்து கொள்ளல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-19)

## மத்தியஸ்தர் சபை பிற்போடப்பட்டுள்ளது

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச மத்தியஸ்தர் சபையில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த வழக்கு விசாரணைகள் புதுவருடப்பிறப்பினால் நடைபெறமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்குகள் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என கரவெட்டி மத்தியஸ்தர் சபை தவிசாளர் சி. நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (அ-3-10)

## நீதவான்களுக்கு திடீர் இடமாற்றம்

(கொழும்பு)

நீதிவான்களுக்கு வழங்கப்பட்டுள்ள திடீர் இடமாற்றங்களுக்கு நீதிச்சேவைகள் கூட்டமைப்பு எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

சிறிய நீதிமன்றங்களை சேர்ந்த 30 நீதவான்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதோடு சில சிரேஷ்ட நீதவான்களுக்கு மிகச்சிறிய நீதிமன்றங்களில் பணிபுரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான திடீர் இடமாற்றமானது நீதிமன்றக்கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடுமென நீதிச் சேவைக் கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமைக்கு நீதிச்சேவைகள் கூட்டமைப்பு எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### தவறுகளைத் திருத்திக்கொள்!



✦ ஒழுக்கத்தை அதிகம் வலியுறுத்தியதோடு அதைக் கடைப்பிடித்தவர்களில் புத்தருக்கு இணையான ஒருவரை உலகம் இதுவரை காண முடியவில்லை.

✦ ஆயிரம் முறை இடறி விழுவதன் மூலம் நல்ல ஒழுக்கத்தை உறுதியாகப் பின்பற்றி நடக்க முடியும்.

✦ ஆன்மீகம் என்பது அனுபவித்து அறியும் விடயமே தவிர வெறும் பேச்சன்று.

✦ இரும்பைப் போன்ற மன உறுதியும் மலைகளைத் துளைத்துச் செல்லும் வலிமையும் வந்துவிட்டால் கடலையும் கடக்க முடியும்.

✦ அறிவு வளர்ச்சிக்கு ஒரே ஒரு வழிமுறைதான் இருக்கின்றது. அதுதான் நம்முடைய மனதை ஒருமுகப்படுத்துவதாகும்.

✦ அன்பில்லாதவன் பெற்ற உலகியல் அறிவும் ஆன்மீக ஞானமும் பயனற்றது. அவனால் கடவுளை ஒருபோதும் அடையமுடியாது.

✦ நான் கெட்ட செயலை செய்துவிட்டேன் என்று வருந்துவதைக் காட்டிலும் அதைத் திருத்திக்கொள்வதே மேலான செயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இன்றைய ஆட்டங்கள்

ஹைதராபாத் சன்ரைஸர்ஸ்
*Vs*
பெங்களூர் ரோயல் சலஞ்சேர்ஸ்

**மாலை 4 மணி**

மும்பை இந்தியன்ஸ்
*Vs*
டில்லி டேர்டேவில்ஸ்

**இரவு 8 மணி**



# சும்மா இருப்பதற்கா அதிக விலைக்கு ஏலம் போனார் மேக்ஸ்வெல்?

இந்த ஐ.பி.எல் போட்டியில் அதிக விலைக்கு ஏலம் போனவர் மேக்ஸ்வெல். அவுஸ்திரேலிய வீரரான அவரை மும்பை இந்தியன்ஸ அணி ரூ.5.30 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது. ஆனால் மும்பை அணி விளையாடிய 2 ஆட்டத்திலும் மேக்ஸ்வெலுக்கு விளையாட வாய்ப்பு வழங்கப்படவில்லை.

சென்னையில் நடைபெற்ற ஆட்டத்தில் அவருக்கு ஆடவாய்ப்பு கிடைக்கலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் அவர் வாங்கிலே உட்கார வைக்கப்பட்டிருந்தார்.

மும்பை அணித் தலைவர் பொண்டிங், போலார்ட், ஜான்சன், சுமித் ஆகிய 4 வெளிநாட்டு வீரர்கள் குறைந்த விலைக்கு ஏலத்தொகையில் வாங்கப்பட்டும் அவர்கள் இரு போட்டிகளிலும் விளையாடி இருந்தமை குறிப்பிடத்தக்கது.


யுவராஜ்சிங்

சென்னை அணித் தலைவர் தோனியும் பயிற்சியாளர் பிளமிங்கும்.....




# துடுப்பாட்ட வீரர்களை கடுமையாக சாடுகிறார் சென்னை பயிற்சியாளர் பிளமிங்

மும்பை இந்தியன்ஸ் அணியிடம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி அடைந்த தோல்விக்கு துடுப்பாட்ட வீரர்களைக் கடுமையாக சாடியிருக்கிறார் பயிற்சியாளர் பிளமிங்.

அவர் கூறும் போது, 'ஆடுகளம் நன்றாக இருந்தது. முதல் பாதியில் நாங்கள் ஓரளவு நல்ல நிலையிலேயே இருந்தோம். ஆனால் எங்களது துடுப்பாட்ட வீரர்களின் அனுபவத்தை வைத்து பார்க்கும்போது, துடுப்பாட்டம் தரமாக இல்லை என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். அதிலும் சிலர் ஆட்டம் இழந்தவிதம், ஏற்றுக்கொள்ளவேமுடியாது. இந்த ஆட்டத்தில் நாங்கள் வெற்றிக்கு தகுதியான அணியாக இல்லை. இருப்பினும் அடுத்த ஆட்டத்தில் இதைவிட சிறப்பாக ஆடுவோம் என்று நம்புகிறேன்' என்றார் பிளமிங்.

இத் தோல்வி குறித்து தோனி,கருத்து வெளியிடுகையில் , பந்து வீச்சாளர்கள் தங்கள் பணியை சிறப்பாக செய்தனர். ஆனால் துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டம் மோசமாக இருந்தது என்றார்.

# தென்னாபிரிக்க வீரருக்கு கணுக்காலில் காயம்



சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் சகலதுறை வீரரான அல்பிமோர்க்கல் மும்பை அணிக்கு எதிரான முதல் ஆட்டத்தில் ஆடவில்லை. தென்னாபிரிக்க உள்ளூர் போட்டியில் பங்கேற்றுள்ள அல்பிமோர்க்கல் கணுக்கால் காயத்தால் அவர் அவதிப்பட்டு வருவதால் ஐபிஎல்லில் மேலும் சில ஆட்டங்களில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# யுவராஜும் இணைந்தார் முதுகுவலி பட்டியலில்!

ஆறாவது ஐபிஎல் போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்றுவரும் நிலையில் நட்சத்திர வீரர்கள் காயமடைந்து வருவது தொடர் கதையாகி வருகிறது. ஐபிஎல் போட்டிக்கு முன்னரே பல வீரர்கள் காயத்தால் போட்டியில் இருந்து விலக தற்போது போட்டி நடைபெற்றுக்கொண்டிருக்கும் இத்தருணத்திலும் பல வீரர்கள் காயத்தால் அவதிப்பட்டு வருகின்றனர்.

ஏற்கனவே முதுகுவலி காரணமாக அவுஸ்திரேலிய அணியின் தலைவர் கிளார்க் ஐபிஎல் போட்டியில் இருந்து முற்றாக விலகியுள்ளார். தற்போது அந்த பட்டியலில் புனே அணியின் நட்சத்திர வீரர் யுவராஜ்சிங்கும் இணைந்துள்ளார். முதுகுவலியால் அவதிப்பட்டு வரும் யுவராஜ்சிங் பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் களமிறங்கவில்லை.

அடுத்த ஆட்டத்திலும் அவர் களமிறங்குவது கேள்விக் குறியாகவே உள்ளது.

# கலக்குகிறார் வோணர்

ஆறாவது ஐ.பி.எல் போட்டிகளில் இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் டேவிட் வோணர் அதிக ஓட்டங்களுடன் முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும் தற்போதைய டில்லி டேர்டேவில்ஸ் அணியின் வீரருமாகிய வோணர் 98 ஓட்டங்களைப் பெற்று முதல் இடத்தில் உள்ளார்.

அடுத்து மும்பை இந்தியன்ஸ் அணியின் தினேஸ் கார்த்திக் 97 ஓட்டங்களுடன் இரண்டாவது இடத்திலும், பெங்களூர் ரோயல் சலஞ்சேர்ஸ் அணியின் சிக்ஸர் மன்னன் கிறிஸ் கெயில் 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.



வோணர்


# பாக்.வீரர்களையும் ஐ.பி.எல்.இல் உள்வாங்கவேண்டும்

ஐ.பி.எல்., தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் விளையாட, பி.சி.சி.ஐ., அனுமதி அளிகக வேண்டும், என, பாகிஸ்தான் அணி முன்னாள் தலைவர் வசிம் அக்ரம் கோரிக்கை விடுத்துள்ளார்.இந்தியா, பாகிஸ்தான் இடையே சுமுக உறவு இல்லை. இதனால் ஐ.பி.எல்., தொடரில் இம்முறையும் பாகிஸ்தான் வீரர்கள் இடம்பெற இயலவில்லை. இது குறித்து வசிம் கூறுகையில், விளையாட்டு, அரசியல் இரண்டையும் தனித்தனியாக பார்க்க வேண்டும். எங்கள் நாட்டு வீரர்களை ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) அனுமதி அளிக்க வேண்டும். பாகிஸ்தான் அணிக்காக, வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்கும் வாய்ப்பு கிடைததுள்ளது. இதனால் அதிக மகிழ்ச்சியுடன் உள்ளேன். ஏனெனில், எனது அணிக்கு ஏதாவது திருப்பி செய்ய வேண்டும் என நினைத்தேன். தற்போது நடந்துள்ளது. என் அனுபவத்தின் மூலம், இளம் வீரர்களை உருவாக்குவேன். இவ்வாறு வசிம் அக்ரம் கூறினார்.

—வசிம் அக்ரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்புச் சம்பியனான கொல்கத்தாவை பணிய வைத்தது ராஜஸ்தான்




கொல்கத்தா அணிக்கும் ராஜஸ்தான் அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 19 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நேற்று ஜெய்ப்பூரில் நடைபெற்ற 8-வது லீக் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதிக் கொண்டன.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி, ராஜஸ்தான் அணியை துடுப்பாட்டம் செய்ய அழைத்தது. அந்த அணியின் சார்பில் வோட்சன், ரகானே தொடக்க வீரர்களாக களமிறங்கினர். 3-வது ஓவரிலேயே இந்த ஜோடியை பிரட் லீ பிரித்தார்.

அவரது வேகப்பந்தில் வோட்சன் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததையடுத்து, ரகானேயுடன் டிராவிட் களமறங்கினர். இந்த ஜோடி விக்கெட்டுக்களை காப்பாற்றும் வகையில் ஆடியதால் பெரிய அளவிலான ஓட்ட எண்ணிக்கையை எட்ட முடியவில்லை.

2 பவுண்டரிகளை விளாசிய டிராவிட் 17 ஓட்டங்களில் அரங்கு திரும்பினார். மறுமுனையில் நிதானமாக ஆடிக்கொண்டிருந்த ரகானே, 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.


கடைசி நேரத்தில் விறுவிறுப்பாக ஆடிய ஹொட்ஜ் - யாக்னிக் ஜோடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை ஓரளவு உயர்த்தியது.

இந்நிலையில் அணி 137 ஓட்டங்களை எட்டிய போது, யாக்னிக் 16 ஓட்டங்களில் ரன் அவுட் ஆனார். ஹொட்ஜ் 46 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். முடிவில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 6 விக்கெட் இழப்பிற்கு 144 ஓட்டங்களை எடுத்தது.

கொல்கத்தா தரப்பில் சுனில் நரேன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். தவிர பிரட் லீ, பாட்டியா, சுக்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இதையடுத்து 145 ஓட்டங்களை எடுத்தால் வெற்றியென்ற இலக்குடன் கொல்கத்தா அணி களமிறங்கியது.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவர் ராவிட் எந்தவித சுழற்பந்து வீச்சாளர்களையும் பயன்படுத்தாமல் கொல்கத்தா அணியை 19 ஓவர்களில் 125 ஓட்டங்களுக்கு மடக்கினார். அதிகபட்சமாக அவ்வணி சார்பில் இயன் மோர்கன் 51 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் கூப்பர், திரிவேதி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக சித்தார்த் திரிவேதி தெரிவானார்.



# தமிழகத்தில் அகதி முகாம்கள் இருப்பதற்கான தேவை என்ன?

## தினமணி ஆசிரியர் தலையங்கத்தில் கேள்வி

(சென்னை)

தமிழகத்தில் அகதி முகாம்கள் ஏன் தேவை என தினமணி கேள்வியெழுப்பியுள்ளது. நேற்றுத் தினமணி பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கத்திலேயே மேற்படி கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

தமிழ்நாட்டிலிருந்து அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற இலங்கை அகதிகள் 120 பேர் நடுக்கடலில் மீட்கப்பட்டு, நாகையில் ஒரு மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியா சென்ற சில மாதங்களிலேயே தங்களுக்குக் குடியுரிமை கிடைத்துவிடும் என்பதால் வாழ்வு தேடிச் தப்பிச் செல்ல முற்பட்டதாகவும், இங்கே படித்து பட்டம் பெற்றாலும் கூட, இலங்கைத் தமிழர்களுக்கு அரசு வேலையும் கிடைப்பதில்லை. தனியார் அலுவலகங்களிலும் வேலை கிடைப்பதில்லை என்பதாலும் இந்த முடிபுக்கு வந்ததாக அவர்கள் அதிகாரிகளிடம் கூறியுள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள 132 முகாம்களில், தங்கவைக்கப்பட்டுள்ள சுமார் ஒரு லட்சம் அகதிகளின் வாழ்க்கைச் சூழல் மிகவும் மோசமாக இருக்கிறது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

இந்த அகதிகளுக்கு, மிகச்சிறிய அளவில் நிதியுதவியும் அரிசி, மண்ணெண்ணெய் ஆகியனவும் வழங்கப்பபடுகின்றன. அது மட்டுமே வாழ்க்கைக்குப் போதுமா?

தமிழ்நாட்டில் ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பிறகு, இலங்கை அகதிகள் முகாம்கள் முற்றிலும் புறக்கணிக்கப்படுவதும், சந்தேகத்துடன் பார்க்கப்படுவதுமான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

இலங்கை அகதிகளை, தமிழீழ ஆதரவுப் போராட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொண்ட தமிழக அரசியல் கட்சிகள், அவர்களது வாழ்வாதாரம் குறித்துப் பெரிதும் பேசியதில்லை என்பதும் நிலைமை மோசமானதற்கு இன்னொரு காரணம்.

மேலும், அகதிகளை வைத்து வருவாய்த்துறை அலுவலர்கள் கொழித்தனர் என்பது மற்றுமொரு கசப்பான உண்மை. இவர்களுக்கான நிதியுதவியில் கையாடல் செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் எத்தனை இலங்கை அகதிகள் இருக்கிறார்கள், முகாமைவிட்டு வெளியேறித் திரும்பாதவர்கள் எத்தனை பேர் என்ற புள்ளி விபரம் கூட முறையாக இல்லாத நிலையில்தான் வருவாய்த்துறை இருக்கிறது.

ஒவ்வொரு அகதியும் முகாமில் உள்ள பதிவேட்டில் தினமும் கையெழுத்திட வேண்டும். இல்லாவிட்டால் அவர் எங்கே சென்றிருந்தார் என்பதற்குச் சரியான விளக்கம் சொல்ல வேண்டும்.

இரண்டு நாட்களுக்கு மேலாக முகாமில் இல்லாமல் போனால் அவர் பெயர் நீக்கப்பட வேண்டும், அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.

முகாமுக்குத் திரும்பாதவர் இலங்கை சென்றாரா அல்லது வேறு மாநிலத்துக்கு சென்றாரா? அல்லது வருவாய்த்துறைக்கு பல பத்தாயிரம் ரூபாய் லஞ்சம் கொடுத்து, குடும்ப அட்டை பெற்று இந்தியக் குடிமகன் போலவே மாறிவிட்டாரா என்பதைக் கண்டறிய வேண்டும். ஆனால் வருவாய்த்துறையும், காவல்துறையின் கியூ பிராஞ்சும் இதை அரசின் கவனத்துக்கு கொண்டு செல்வதாகத் தெரியவில்லை.

அவுஸ்திரேலியா செல்ல முயன்ற இலங்கை அகதிகளை நடுக்கடலில் இருந்து அழைத்து வந்து, இருபத்து நான்கு மணி நேரத்துக்கும் மேலாக, இவர்களை என்ன செய்வது என்று தெரியாமல், நாகையில் ஒரு மண்டபத்திலேயே தங்க வைத்திருக்கும் அரசு அதிகாரிகளின் நோக்கம் என்ன? இவர்களில் பல்வேறு முகாம்களைச் சேர்ந்தவர்கள் 75 பேரை மட்டுமே நீதிபதி முன்பாக ஆஜர்படுத்தினர். மற்றவர்களை ஏன் நீதிமன்றத்துக்கு அழைத்து வரவில்லை?

காரணம், இவர்கள் தங்கள் முகாம்களை விட்டு வெளியேறி பல நாட்களாகியும், இவர்களது பெயர் இன்னமும் நீக்கப்படாமல் இருக்கக்கூடும். ஆகவே அதை சரி செய்வதற்காக நடவடிக்கையைத் தாமதப்படுத்துகிறார்கள் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. இவர்களில் பலர் அகதிகள் அல்ல, இந்தியர்கள் தான் என்பதாகக்கூட இருக்கலாம்.

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழர்களில் விருப்பமுள்ளவர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி விட்டு, இங்கேயே வாழ விரும்புகிறவர்களுக்கு, இரட்டைக் குடியுரிமையே வழங்க முடியாதநிலையில், இந்தியக் குடியுரிமையைக் கூட அளித்து விட நாம் பரிசீலிக்க வேண்டும். இனியும் தமிழகத்தில் அகதிகள் முகாம்கள் தேவையில்லை என்றுள்ளது. (எ-11)

## அறிவித்தல்

*மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)*
*வட்டாரம்: -07*
*யாழ் மானிப்பாய் வீதி*
*ஆதன இலக்கம்: -124 A*

வட்டாரம் : 05. யாழ் மானிப்பாய் வீதி. ஆனைக்கோட்டை ஆதன இலக்கம் 124A இல் அமைந்துள்ள (உறுதிப்படி:- வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டை இறை **ஆலடியும் குழந்தையர் முத்தமும் யாமத்தாழ்வும்** எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு இரண்டும் (நில.பர 02 கொண்ட ஆதனம்) இவ்வாதனமானது யாழ்ப்பாண சங்கரப்பிள்ளை றோட் மானிப்பாய் செல்வராசாவும் பெண் பொன்மலர் ஆகிய இருவருக்கு குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம் - தியாகராசா முகதாவில் நிறைவேறிய 4793 ஆம் இலக்க 2002.05.10 ஆம் திகதிய சீதன அறுதி உறுதி மூலம் சுந்தரமூர்த்தி - யசோதா ஆகிய இருவருக்கு குறித்த ஆதன மானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய்க்கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இவ் **ஆலடியும் குழந்தையர் முத்தமும் யாமத்தாழ்வும்** நிலப்பரப்பு 02 இவ்வாதனத் திற்கு உரிமை கோருப வர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் உரிமை கோரப்படாத விடத்து இவ்வாதனம் சுந்தரமூர்த்தி பெண் யசோதா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய நட வடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தவிசாளர்,**
வலி . தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

## இணுவில் மாணவர்களை கௌரவிக்க ஏற்பாடு

இணுவிலை பூர்வீகமாகக் கொண்ட மாணவர்களில் கடந்த இரண்டு வருடங்களுக்குள் தேசிய மட்டத்திலான கலை, இலக்கிய விளையாட்டுப்போட்டிகளில் பங்கு பற்றி முதலிடம் பெற்றவர்களை கௌரவிக்க இணுவில் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

தகுதியுடைய மாணவர்கள் தமது வெற்றிச் சான்றிதழை அதிபரூடாக அல்லது கிராம சேவையாளரூடாக உறுதிப்படுத்தி நாளை மறுதினம் 11 ஆம் திகதி காலை 10 மணிக்கு முன்னர் இணுவில் பொது நூலக அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இக் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி அன்று மாலை 7.00 மணிக்கு இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் மணி மண்டபத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## தேர்த்திருவிழா நேரடி அஞ்சல்

காரைநகர் மணற்காடு அருள்மிகு ஸ்ரீகும்பநாயகி முத்து மாரியம்பாளின் தேர்த் திருவிழா இன்று (09.04.2013) காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இத் தேர்த்திருவிழா நிகழ்வுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ்.சேவை அலைவரிசையூடாக நேரடி அஞ்சல் செய்யப்படவுள்ளது. இந் நேரடி அஞ்சல் நேர்முக வர்ணனையை வர்ணனைக் கலாநிதி மதுரக்வி காரை எம்.பி. அருளானந்தன் தொகுத்து வழங்கவுள்ளார். (எ-11)

## போக்குவர...

மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வாகனப் போக்குவரத்து தொடர்பில் பொலிஸாரிடம் தற்போது இருக்கின்ற சட்ட திட்டங்கள் காலம் கடந்தவையாகும். ஆகையினால் சாரதிகளை கொஞ்சம் வேகமாக பயணிப்பதற்கு இடமளிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அகதிகளு...

திகதி நாகை மாவட்டம் வேளாங்கண்ணி அருகே உள்ள கிராமத்தில் இருந்து விசைப் படகு மூலம் அவுஸ்ரேலியாவிற்கு தப்பிச் செல்ல திட்டமிட்டனர்.

பின்னர் அந்த படகில் அவர்கள் அவுஸ்திரேலியா நோக்கி சென்று கொண்டிருந்தனர். அப்போது நடுக்கடலில் படகு திடீரென பழுதாகி நின்றது. இதனால் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 120 பேரையும், இந்திய கடற்படையினர் மீட்டு, புதுச்சேரி மாநிலம் காரைக்கால் துறைமுகத்திற்கு அழைத்து வந்தனர்.

அதன் பின்னர் அவர்கள் நாகை கடலோர காவல் படை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் அனைவரும் நாகைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

வெளிநாட்டிற்கு செல்ல தேவையான பாஸ்போட், வீசா போன்ற எந்த ஆவணங்களும் அவர்களிடம் இல்லை. அதனால் பிடிக்கப்பட்ட 120 பேரில் பெண்கள், குழந்தை, சிறுவர்கள் தவிர மற்ற 75 பேர் மீது நாகை கடலோர காவல் படை பொலிஸ் பாஸ்போர்ட் சட்டப்பிரிவு, அயல்நாட்டவர் சட்டப்பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

மேலும் அகதிகளிடம் அவுஸ்ரேலியாவிற்கு அழைத்துச் செல்வதாக கூறி விசைப்படகில் ஏற்றிச்சென்ற ஏஜெண்டுகள் உட்பட்ட 6 அடையாளம் தெரியாத நபர்கள் மீது இந்திய கடலோர காவல் படை பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட 75 பேரையும் நாகை கடலோர காவல் படை பொலிஸார், நாகை நீதவான் நீதி மன்றில் ஆஜர்படுத்தினர்.

அவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை காவலில் வைக்கும்படி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ-11)

# நல்லிணக்க குழுவின்...

அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்த அரசு முன்னெடுக்கவுள்ள தேசிய செயற்றிட்டத்தை வரவேற்ற பொது எதிர்க்கட்சிகள், அந்த செயற்றிட்ட வரைபை இக்கட்சிகளிடம் சமர்ப்பித்தால் இக்கட்சிகள் அவற்றுக்குப் பங்களிப்புச் செய்யும் என்றும் தெரிவித்தன.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவை மேற்கண்டவாறு தெரிவித்தன.

வடக்குத் தேர்தல் நடத்தப்படும் என அரசு அறிவிப்பு விடுத்துள்ளது. ஆனால் அங்கு தேர்தல் நடத்த முடியாது. ஏனெனில், சுயாதீன பொலிஸ், தேர்தல் ஆணைக்குழுக்கள் நாட்டில் உருவாக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கில் நடத்தும் அரசியல் கூட்டங்களுக்கே குழப்பம் விளைவித்து தாக்குதல் நடத்துகின்றனர். நிலைமை இவ்வாறிருக்க, அங்கு எப்படித்தேர்தல் நடத்துவது என விக்கிரம்பாகு கருணாரட்ன கேள்வியெழுப்பினார்.

எனவே, 18-வது திருத்தச்சட்டத்தை உடனடியாக நீக்கி 17-வது திருத்தச் சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். இதனூடாக வடக்கு மக்களின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்தியாவும், சர்வதேசமும் இதைத்தான் எதிர்பார்க்கின்றன என்றார் நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன. (எ-11)

# இலங்கை...

முன்னெடுத்துள்ளது.

தமிழகத்தில் பல கடைகளில் இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிஸ்கட், பழங்கள், இறைச்சி, பருத்தி ஆயத்த ஆடைகள் விற்பனைக்கு வந்திருக்கின்றன. அவற்றை புறக்கணிக்க வேண்டும் என்றும் நடுவம் கோரியுள்ளது. (எ-11)

# மிதிவெடி...

ருக்கும் ஹலோ ரஸ்ட் நிறுவனப் பணியாளரே இவ்வாறு உயிரிழந்தவர் எனவும் தெரிவித்தார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக கிளிநொச்சி மாவட்டவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பளைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-3,6)


## காணி விற்பனைக்கு

சுன்னாகம் சந்திக்கு அருகாமையில் கே.கே.எஸ் வீதியில் பெற்றோல் விற்பனை நிலையத்திற்கு பின்புறமாக இரண்டாவதாக உள்ள 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. கே.கே.எஸ் பிரதான வீதியிலிருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ளது.

தொடர்பு:- 071 2828041
071 4806309
(2344)



## நிரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்

O/L
DAY CLASS-Re.

ஆரம்பம்:-12.04.2013
வெள்ளி 8 மணி
(சி-2908)



FALC FRENCH LANGUAGE CENTRE
யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு நிறுவனம்

FRENCH CLASSES

Canada, French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட, International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...

ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்).

690 க்கும் மேற்பட்டோர் French கற்றுச் சென்றுள்ளனர்..

ஆரம்பம்: 20.04.13 Sat 2 pm
*No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ வைத்தியசாலை முன்பாக)
T.P. 0779 789 456

ஆரம்பம்: 23.04.13 Tue 11am
No, 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
English (A1,B1,IELTS), Italian, Deutsch, Sinhala வகுப்புக்களும்...



பிரித்தானியா — கிளிநொச்சி நகரில்...
Little Aid இன் இலவச கணனிப் பயிற்சி கற்கை நெறி 2nd Batch

இலவச புத்தகங்கள், கையேடுகள்
வயது வேறுபாடின்றி அனைவருக்குமுரியது
பிரித்தானியா நிறுவனத்தின் சான்றிதழ்
(மாணவர்கள் மற்றும் இல்லத்தரசிகள், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கென தனித்தனி பிரிவுகள்)

இரண்டாம் பிரிவுக்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முகவரி, தொலைபேசி இலக்கத்துடன் கூடிய உங்கள் சுயவிபரக்கோவையினை எதிர்வரும் 12.04.2013 க்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்
"லிட்டில் ஏய்ட்", 323 பலாலி வீதி, யாழ்ப்பாணம் [illegible] 077 4709 468


# இந்திய எம்.பிக்கள்...

இந்த குழுவில் பா.ஜ.கவை சேர்ந்த பிரகாஷ் ஜவடேகர், காங்கிரசை சேர்ந்த சந்தீப் தீட்ஷித் உட்பட 7 பேர் கொண்ட குழுவினர் நேற்று இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்தனர்.

இந்த பயணத்துக்கு இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பு (பிக்கி) ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிலையில் இந்திய எம்.பிக்கள் குழுவின் இலங்கைப் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக மக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் எதிர்ப்பால் இந்திய எம்.பி.க்களின் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதேவேளை மத்திய மந்திரி ஜெயந்தி நடராசனும் இலங்கை பயணத்தை ரத்துச் செய்யுமாறு வர்த்தக கூட்டமைப்புக்கு கடிதம் அனுப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கைக்கு வரவிருந்த இக்குழுவில் தமிழ் நாட்டு எம்.பிக்கள் எவரும் உள்ளடங்கவில்லை எனவும் கூறப்பட்டது.

இவ் எம்.பிக்கள் குழு நேற்று முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்க ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இனத் தேசி...

படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினர், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கு எதிராக் குற்றம் சுமத்தப்பட்டு வருவதாகவும், இவை பிழையான தகவல்களின் அடிப்படையில் சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (எ-11)

# இரும்புப்...

தலைவியாகவும் இவர் இருந்தார்.

பிரிட்டனின் முதலாவது பெண்பிரதமர் இவராவார். இவர் காலத்தின் தான் போலக்லாண்ட் தீவுகள் தொடர்பில் ஆர்ஜண்டீனாவுடன் பிரிட்டன் போரில் ஈடுபட்டு அதில், வெற்றியும் பெற்றது.

1979 ஆம் ஆண்டு தான் பதவி ஏற்றதை அடுத்து பிரிட்டனின் அரசியல் அரங்கில் பல மாற்றங்களை அவர் ஏற்படுத்தினார்.

சர்வதேச அரங்கில் செல்வாக்குப் பெற்ற மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மிகப்பெரிய பிரிட்டிஷ் தலைவியாகவும் அவர் திகழ்ந்தார். (எ-11)

# முல்லைத்தீவில் நில...

பில் கரைத்துறைப்பற்று பிரதேசத்தின் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாஜத்தின் சார்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஊடாக எதிர்வரும் 10-ம் திகதி இந்த மகஜர் சமர்ப்பிக்கப்படும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வீடமைப்பு வசதிகள் முழுமையாகச் செய்து கொடுக்கப்பட வேண்டும். இந்திய வீடமைப்புத் திட்டத்தில் இம்மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்களுக்கு உதவி கிடைக்கவில்லை.

இதனால் மீள்குடியேறிய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர். அதேவேளையில் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக குறைந்த வட்டியிலான கடனுதவி அல்லது நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

கொக்குளாய், நாயாறு, வட்டுவாகல், நந்திக்கடல் போன்ற பகுதிகளில் நன்னீர் மீன்பிடி இடம்பெறுகின்றது. அத்துமீறி வரும் தென்னிலங்கை மீனவர்கள் இங்கு தடை செய்யப்பட்ட வழிகளில் மீன்பிடியில் ஈடுபடுவதால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.

இவர்களுக்கு படையினர் தரப்பிலிருந்து உதவிகள் கிடைக்கின்றது. இவற்றைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நாம் பாரம்பரியமாக விவசாயம் செய்து வந்த கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, குமுழமுனை, செம்மலை, அளம்பில் பகுதிகளிலுள்ள நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன அல்லது பாதுகாப்பைக் காரணம் காட்டி மக்கள் செல்லமுடியா தவையாகவுள்ளன. இதனால், எமது விவசாய நிலங்களை நாம் பெருமளவுக்கு இழந்துள்ளோம். வாழ்வாதாரப் பிரச்சினையும் இதனால் உருவாகியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

# முல்லை. செய...

துள்ளனர்.

இந் நிலையில் கடந்த 6ஆம் திகதி குறித்த பகுதியில் காடுகளை அழித்து முஸ்லிம் மக்களை குடியேற்ற அமைச்சர் றிசாத் பதியூதீன் கடும் பிரயத்தனம் எடுத்திருந்தார்.

இதற்கும் மக்கள் கடுமையான எதிர்ப்பினை தெரிவித்து காடழிக்க வந்த புல்டோசர்களையும் திருப்பி அனுப்பினர். இதனால் அனைத்து பணிகளும் முடங்கியுள்ள நிலையில் நேற்றுக் காலை புத்தளத்திலிருந்து பேருந்துகளில் ஏற்றி வரப்பட்ட 300க்கு மேற்பட்ட முஸ்லிம் மக்களைக் கொண்டு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு எதிரான பதாகைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்துள்ளனர்.

இது முற்று முழுதாக தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் நிரந்தர பிரிவினை ஏற்படுத்தும் நோக்கில் நன்கு திட்டமிட்ட வகையில் மேற் கொள்ளப்பட்டு வருவதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கையளிக்கும் மகஜர் ஒன்றை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகத்திடம் முஸ்லிம்கள் ஒப்படைத்தனர். (எ-11)


25ஆவது வருட கல்விச் சேவையில்
புதிய
நாவலர்
கல்வி நிலையம்
(C-2912)
O/L DAY CLASS
ஆரம்பம்:10.04.2013 புதன் காலை 8.00 மணி
O/L DAY CLASS தனித்துவமான கல்வி நிறுவனம்



உயர்ந்த பெறுபேறுகளுக்கு உறுதுணையான நிறுவனத்தில்
ஏப்ரல் 15 இல் ஆரம்பம்
O/L
DAY CLASS
(காலை 8.00- பி.ப. 1.00)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
The Express Institute
Irupalai Junction-Kopay



## முக்கிய அறிவித்தல்

## V.S.P நல்லெண்ணெய்

அன்பான V.S.P நல்லெண்ணெய் விற்பனையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் தெரியப்படுத்துவது என்னவெனில், V.S.P என்று போலியான லேபில்களை பயன்படுத்தி நல்லெண்ணையாக வெளிவருகின்றன. எனவே நீங்கள் எமது தயாரிப்பான V.S.Pஐ இலகுவாக இனம்கண்டுகொள்ள பரிமளா ஸ்ரோர்ஸ், 26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன், உரிமையாளர் பொ. பாஸ்கரன் என்பவரின் பெயரும் அச்சிடப்பட்டுள்ளது.

ஆதலால் அன்பான விற்பனையாளர்களும், பாவனையாளர்களும் இதனை நன்கு கவனித்து கொள்வனவு செய்து கொள்ளவும் என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.

பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:பொ.பாஸ்கரன்
0212229165,
0212224135.
(சி-2846)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.